உ

திருச்சிற்றம்பலம்.

சௌரமானமும் சாந்திரமானமும்

இதில் விநாயக சதுர்த்தி, நவராத்திரி, கந்தர்சஷ்டி முதலிய சிவ விரதங்களெல்லாம் சௌரமானத்திலேயே நடைபெறவேண்டும், சாந்திரமானத்தில் கூடாது என்ற உண்மை விளக்கப்பெற்றுள்ளது.

சென்ற விபவ ஆண்டிற்போலவே நிகழும் பிரசோற்பத்தி ஆண்டிலும் நவராத்திரியைச் சௌரமானப்படிதான் செய்யவேண்டு மென்பதற்குரிய ஏதுக்களும் விளக்கப்பட்டிருக்கிறது.

தென்னிந்திய சைவசித்தாந்த சங்கம்,
திருநெல்வேலி.

மீரானியா பிரஸ், திருநெல்வேலி.
1931.

திருச்சிற்றம்பலம்.

சௌரமானிகளும் சாந்திரமானிகளும்.

சௌரமானிகள்.	சாந்திரமானிகள்.
(1) சித்திரை, வைகாசி முதலிய மாதங்களை உடையவர்.	(1) சித்திரை, வைகாசி என்ற பெயர்களைச் சைத்திரம் வைசாகம் எனத் திரித்து வழங்குபவர்.
(2) சூரியன் மேடம், இடபம், மிதுனம் முதலிய பன்னிரண்டு வீடுகளில் வாழும் காலமே சித்திரை வைகாசி முதலிய சௌரமான மாதங்கள்.	(2) சந்திரனுடைய வளர்பிறை முதல்நாள் தொடங்கி அமாவாசை முடிய உள்ள காலமே சாந்திரமான மாதங்கள்.
(3) சித்திரை முதலிய மாதங்கள் என்றும் ஒரே அளவையுடையனவாக இருக்கும்.	(3) சாந்திர மாதங்கள் ஏறித் தாழ்ந்து நிலையற்றதாய்ப் பல அளவினதாயிருக்கும்.
(4) வேறொன்றன் ஆதாரமில்லாமல் தனித்து நிற்பன.	(4) சௌரமானமே நிலையுள்ளதென்பதை யுணர்ந்த சாந்திரமானிகள் தங்கள் மாதத்தை எப்போதும் சௌரமான மாதங்களோடு பொருத்தியே கணக்கிடுகின்றனர்.
(5) சற்றேறக்குறைய 365¼ நாட்களையுடையது சௌரமான ஆண்டு.	(5) சாந்திரமான ஆண்டு ஏறக்குறைய 355 நாட்களையுடையது. அதனால் சௌரமானப்படி 32 மாதங்களுக்கொருமுறை சாந்திரமானப்படி 33 மாதங்கள் வரும். அந்த ஒரு மாதத்தை சௌரமாதத்தோடு சேராமையால் சாந்திரமானிகள் அதிகமாதமெனத் தள்ளிவிடுகின்றனர்.

[இதன் தொடர்பை பின்புற ஏடு 3-ம் பக்கம் பார்க்க.]

THE SOUTH INDIA SAIVA SIDDHANTHA SANGAM TINNEVELLY.

The Resolution of the above Sangam in regard to th Celebration of Navaratri Festival of this year in Hind Temple is as follows:—

Resolved (1) that the Hindu Religious Endowment Board the Matathipadis, Temple Committees, and Temple Trustee be requested to order the celebration of the *Navaratri Festiva* of this year in the Temples under their control during the period beginning from 27th Avani Saturday and extending tc the 4th of Purattasi Sunday and the celebration of Dasami day on the 5th idem for the following reasons.

(2) that the public be requested to celebrate the *Navaratri Festival* on the above-mentioned days for the following reasons.

The Sun is an independent planet. He is the king as well as the source of the other six planets of this world. Calculation of time or chronology as determined by the Standard of the Sun is called *Souramanam.* The Moon is a very small planet thrown from the sun. Strictly speaking it is only a satellite to the Earth. It is several million times smaller than the Sun. It revolves not only round the sun but also round the earth. Having no light of its own it shines in the reflected light of the sun. It has its periods of growth and decay every fortnight. Calculation of time or chronology as dertermined by the standard of the moon is *Chandramanam*. Souramana year has twelve months commencing from the month of Chitrai; Chandramana year commences from the day next to Amavasi (new moon day) in Pangun. Chandramana

month is the period which begins from the Prathama (1st day) next to one Amavasi and extends up to the close of the next Amavasi. Souramana month is the period during which the sun is assumed to remain in each of the Twelve Rasis which constitute the Zodiac. The months of Souramana are Chitrai, Vaikasi etc. The months of Chandramana are Chytram; Vysakam etc. The names of the Chandramana months are derivatives of the Chitrai, Vaikasi etc. which are the names of the Souramana

For religious ceremonies, Smartha Brahmans observe the chronology of Chandramana and Tamilians observe the chronology of Souramana but the former class of people do not follow their own system of chronology independently of the chronology of the latter, as the Mohamadans do, but blend it with the other as will be seen below. The Souramana year has about 365¼ days while the Chandramana year has about 354 days. This difference of about 11¼ days in a year between the two systems results in an excess of about 30 days according to the Chandramana system in a period of about 2 years and 8 months i. e. 32 months of the Souramana. Just in that month of the Chandramana year when the excess of 30 days occurs, two Amavasis fall, one at the beginning of that Souramana month and the other at its close, so that there will be 13 Amavasis in that Chandramana year. As an illustration of this case there were two Amavasis in the Ani month of the current Prasorpathtei year. Chandramana Ani month closes with the Amavasi falling on the 2nd of Ani, Chandramana Adi month begins from the 3rd Ani and closes with the 31st idem. But this Chandramana Adi month begins and terminates within the Ani month of Souramana and does not coincide with the Adi month of Souramana. The followers of Chandramana treat this Adi of their system falling within the Ani of Souramana as an extra Adi or false Adi and take it out of account altogether in order to make it coincide with the

month of Souramana system and adopt as their true Adi month the period beginning from the 1st of Adi on which Prathamai falls, up to the 29th idem according to Souramana. This mode of adjusting their system of chronology in the light of the Souramana system by Chandramanees implies evidently their admission that the Souramana system is steady and permanent furnishing support to the Chandramana system which cannot stand independently. The Chandramanees should either follow their own system of chronology without interfering with the Souramana system of the Tamilians or should adopt the latter altogether if they prefer it. This inconsistent mode of following one system conjointly with the other in the manner above described is illogical and misleading.

The Sivagamas according to which Saiva Temples are built and maintained lay down clearly in several places that Temple festivals and ceremonies should be celebrated on specific days such as Navaratri, Sivaratri calculated according to the Souramana chronology which is steady and invariable and independent in order to produce beneficial effects to the people in general and that their celebration on specific days calculated according to Chandramana chronology which is varying and dependent will produce evil effects. Even the followers of Chandramana chronology follow in practice the Souramana chronology for the purpose of fixing marriage and other ceremonial occasions in their houses.

The extra or false month of the Chandramana chronology stated in para 2 above occurs in the current year and the Smartha Brahmin astrologers have noted in their Panchangams the period commencing from the 25th day of the coming Purattasi and closing with the Navami day i. e. the 3rd of Aypasi as the Navaratri days and the following Dasami day i. e. 4th of Aypasi as the Vijaya Dasami day. Such noting is against the rules of Saiva Agamas. Kamiga Agama Maguda Agama, Achitha

Agama, Karana Agama, Vijayadasami Rules, Mahanavami Puja Rules of Agorasivachariar, Nissvasa Karigai etc. and Paththathis (compilations from Agamas) prescribe that the Navaratri festival celebration should have Navami day in the Purattasi month according to Souramana chronology as the last day of the nine days of Navaratri. In accordance with these injunctions the Navaratri festival celebration of the Prasorpaththi year shall commence on the 27th Avani (12th September 1931) which is a Saturday and close with the Mahanavami day on the 4th Purattasi (20—9—31) as noted in the Saiva Panchangam calculated according to Souramana chronology.

Cases of diversity between the two systems of chronology occured 3 years ago in Vibava year in regard to the celebration of Three festivals viz:- Vinayaga chadurti, Navaratrii and Skandasasti when Sanskrit Paṇdit Sri Subramania Sastriar of Sivagama Paripalana Sangam of Devakotta and astrologer Mr. E. M. Subramania Pillai delivered lectures in meetings convened in the Vasantha Mantapam of Nellaiappar Temple, Tinnevelly on the 6th and 7th October 1928 and established by argument adduced from Agamas and Astrological works that Vinayaga Chadurti, Navaratri and Skandasasti, should be celebrated on the days determined according to Souramana system as noted in Saiva Panchangam and the assembly of learned men and others passed resolutions unanimously in favour of following the Souramana chronology. These three festivals were celebrated on the days specified in the Saiva Panchangam in almost all the Siva Temples of the Tinnevelly District and in temples under the control of the Dharmapuram mutt. Navaratri festival was celebrated on Souramana dates of that year in the temples and private Houses of Bombay provinces etc."

M. V. Nellaiyappa Pillai,
President.

Meeraniya Press,
Tinnevelly, 8—31.

உ

திருச்சிற்றம்பலம்.

தென்னிந்திய சைவசித்தாந்த சங்கம்

திருநெல்வேலி.

நிறைவேற்றுக் கழகத்தாரால் செய்யப்பெற்ற
தீர்மானம் பின் வருவது:—

சந்திரன், செவ்வாய் முதலிய கோள் (கிரகங்)களுக்கெல்லாம் பிறப்பிடமாகவும் அரசாகவும் விளங்குகின்ற சூரியனை வைத்து ஆண்டு, மாதம் முதலியவைகளைக் கணிப்பதே சௌரமானம். நிலையான ஒளியையுடையதாகிய சூரியனிடமிருந்து தோன்றிய பூமியிலிருந்து தெறித்து மிகச் சிறிய உருவுடையதாய் சூரியனைக் காட்டிலும் பலகோடிப் பங்கு சிறியதாய் சூரியனுடைய ஒளியால் விளக்கமுறுவதேயன்றித் தனக்கென உள்ள ஒளியற்றதாய் பூமியையும் சூரியனையும் சுற்றிச்சுற்றி வலம்வருவதாய் வளர்ச்சி தளர்ச்சிகளையுடையதாயுள்ள சந்திரனுடைய வளர்ச்சி தளர்ச்சியை வைத்து நாட்களை எண்ணுவது சாந்திரமானம். சௌரமான ஆண்டு சித்திரை மாதத்தில் தொடங்கி பன்னிரண்டு மாதங்களை உடையது. சாந்திரமான ஆண்டு பங்குனி மாதத்தில்வரும் அமாவாசைக்கு மறுநாள் தொடங்குகிறது. சாந்திரமான மாதம் அமாவாசைகழிந்த மறுநாள் பிரதமைமுதல் தொடங்கி மறு அமாவாசை முடிய உள்ள காலம். சௌரமான மாதமென்பது சூரியன் பன்னிரண்டு இராசிகளில் ஒவ்வொரு இராசியிலும் இருக்கும் காலமாகிய சித்திரை முதலிய மாதங்கள். சாந்திரமாதங்களின் பெயர்கள் சைத்திரம், வைசாகம் முதலியன. சாந்திரமாதப் பெயர்கள் சித்திரை, வைகாசி முதலிய சௌரமாதப் பெயர்களின் திரிபுகளே.

சாந்திரமானிகளாகிய ஸ்மார்த்தப்பிராமணர்கள் சௌரமாதங்களோடு சாந்திர மாதங்களை இணைத்தே வழங்கிவருகின்றார்கள். சௌரமான ஆண்டு சுமார் $365\frac{1}{4}$ நாட்களையுடையது. சாந்திரமான ஆண்டு சுமார் 354 நாட்களையுடையது. இதனால் சௌரமானப்படி சுமார் இரண்டு வருடம் எட்டு மாதங்கள் (அதாவது 32 மாதங்கள்) ஆகும்போது சாந்திரமானப்படி ஒரு மாதம் அதாவது முப்பது நாட்கள் அதிகப்படும். அதாவது அந்தச் சாந்திர வருடத்தில் 13 அமாவாசைகள் வரும். அதில் ஒரே சௌர மாதத்தில் முதலிலும் கடைசியிலுமாக இரண்டு அமாவாசைகள் வரும். உதாரணமாக நிகழும் பிரசோற்பத்தி ஆண்டில் ஆனி மாதத்தில் இரண்டு அமாவாசைகள் வந்திருக்கின்றன. ஆனிமீ 2உ அமாவாசையோடு சாந்திரமான ஆனிமீ முடிகிறது. 3உ தொடங்கி 31உ முடிய சாந்திரமான ஆடிமாதம். ஆனால் இந்தச் சாந்திரமான ஆடிமாதமோ சௌரமான ஆடியோடு சேராமல் ஆனி மாதத்திலேயே முடிந்து விடுகிறது. ஆகையால் சாந்திரமானி

கள் இந்தச் சாந்திர ஆடிமாதத்தை அதிக ஆடிமாத அதாவது பொய்ஆடி மாத) மென்று தள்ளிவிட்டு சௌரமான ஆடிமாதத்தோடு சம்மந்தப்பட்டுள்ள, அதாவது ஆடி௴ 1௳ பிரதமை முதல் தொடங்கி ஆடி௴ 29௳ அமாவாசையோடு முடிவாகிற சாந்திரமாதத்தையே நிஜ அதாவது உண்மையான சாந்திர ஆடிமாதமாகக் கொள்கிறார்கள். இதனால் சௌரமானமே நிலையுள்ள தென்பதும் சாந்திரமானம் நிலையில்லாததென்பதும் சௌரமானத்தோடு சேராத சாந்திரமானம் பொய்யானதே (அதிமாதமே)னச் சாந்திரமானிகளே உடன்பட்ட நடையினரென்பதும் வெளிப்படை. இதனாலேயே தனித்தியங்கும் நிலையுள்ளதாகிய சௌரமானத்திலேயே திருவிழாக்களும் நோன்புகளும் நடைபெற வேண்டுமெனவும் தனித்தியங்கும் நிலையற்றதாகிய சௌரமானத்தைச் சார்ந்து நடைபெறுவதாயுள்ள சாந்திரமானப்படி அவை நடைபெற்றால் மக்களுக்குப் பல கேடுகள் விளையும் எனவும் சிவாகமங்களெல்லாம் பல இடங்களிலும் எடுத்தோதுகின்றன. சாந்திரமானக் கொள்கையார் தங்களுடைய வீடுகளில் மணமுதலிய மங்கலச்சடங்குகளை நடைமுறையில் சாந்திரமானப்படி செய்யாமல் சௌரமானப்படியே செய்துவருகிறார்கள்.

நிகழும் ஆண்டில் சாந்திரமானத்தில் அதிமாதம் வந்தபடியால் நவராத்திரி விழாவைச் சாந்திரமானிகளாகிய சுமார்த்தப் பிராமணர்கள் புரட்டாசி மாதக் கடைசியில் தொடங்கி ஐப்பசி மாதத்தில் மகாநவமி விசயதசமிகளைத் தமது பஞ்சாங்கங்களில் குறித்திருக்கிறார்கள். அது முற்றிலும் தவறானதும் சிவாகமவிதிக்கு மாறானதுமாகும். காமிகாகமம், மகுடாகமம், அசிதாகமம், காரணாகம விசயதசமிவிதி, அகோரசிவாசாரியார் மகாநவமி பூசாவிதி, நிச்வாசகாரிகை, முதலிய மூலாகமங்களும் பத்ததிகளும் நவராத்திரியானது சௌரமானப்படி புரட்டாசி மாதத்தில் மகாநவமியை முடிவாகக்கொண்டு நடைபெற வேண்டுமென்று விதித்திருக்கின்றன. அவ்விதி கொண்டு சைவப்பஞ்சாங்கத்தில் குறித்துள்ளபடி நிகழும் பிரசோற்பத்தி ஆண்டு ஆவணி௴ 27௳ சனிக்கிழமை நவராத்திரி விழா தொடங்கி புரட்டாசி௴ 4௳ ஞாயிறன்று மகாநவமியைக் கொள்வதே முறை.

இதே மாதிரி சென்ற மூன்றாண்டுகளுக்கு முன் விபவ௵த்தில் மாறுபாடு தோன்றியபோது 1928-ம்௵ அக்டோபர்௴ 6, 7-ம் ௳களில் திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில் வசந்த மண்டபத்தில் கூடிய பேரவையில் தேவகோட்டை சிவாகம பரிபாலன சங்க ஆகம பரிசோதகர் வியாகரண சிரோன்மணி திரு. சுப்பிரமணிய சாஸ்திரியார் அவர்களும் சைவப் பஞ்சாங்க கணிதர் வித்வான் திரு. இ. மு. சுப்பிரமணியபிள்ளை அவர்களும் பல ஆகம கணித நூல்களிலிருந்து தக்க ஆதாரங்களை எடுத்துக் காட்டி விநாயக சதுர்த்தி, நவராத்திரி, கந்தர் சஷ்டி உற்சவங்கள் சௌரமானப்படி தான் நடக்கவேண்டுமென நிலை நாட்டினார்கள்.

அப்பேரவை யாரும் அதுதான் சரியெனத் தீர்மானங்கள் நிறைவேற்றினுர்கள். அங்ஙனமே திருநெல்வேலி நெல்லேயப்பர் கோவில், சங்கரநயினுர் கோவில், திருக்குற்ருலம் முதலிய எல்லாக்கோவில்களிலும் அவ்விழாக்கள் சௌரமானப்படியே நடைபெற்றன. தருமபுர ஆதீன கர்த்தாவர்களும் அதுவே பொருத்தமெனத் தங்களுடைய ஆளுகையிலுள்ள கோவில்களில் அவ்விழாக்களை நடத்தினுர்கள். அந்த விபவ ஆண்டில் பாம்பே முதலிய மாகாணவாசிகள் தங்கள் ஆலயங்களிலும் வீடுகளிலும் சௌரமானப்படியே நவராத்திரி விழாவைக் கொண்டாடியுள்ளார்கள். ஆதலின் நிகழும் ஆண்டிலும் சைவ மடாதிபதிகளும், சென்னை என்டௌமெண்டு போர்டாரும், கோவில் கமிட்டியார்களும், தர்மகர்த்தர்களும், இந்துசமயப் பெருமக்களும் தங்கள் ஆளுகையிலுள்ள திருக்கோவில்களில் ஆவணிமூ 27உ சனிக்கிழமை நவராத்திரி விழா தொடங்கி புரட்டாசிமூ 4உ ஞாயிறன்று மகா நவமியும் 5உ திங்களன்று விசயதசமியும் நடைபெறுமாறு வேண்டும் ஏற்பாடுகள்செய்யும்படி அவர்களை தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்தாராகிய நாங்கள் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறேம்.

M. V. NELLAIAPPA PILLAI,
For தென்னிந்திய சைவசித்தாந்த சங்கம்.
20—7—1931.

சரஸ்வதி பூசையும் ஏடு தொடங்கலும்

புரட்டாசி மாதத்திலேயே செய்யவேண்டும்.

"கன்னியா ராசியில் சூரியனிருக்கும்பொழுது வருகிற வளர்பிறைக் காலமே தெய்வங்களை வழிபடுவதற்குரிய சிறப்புக் காலம். சூரியன் சிங்க ராசிக்கு வரும்பொழுது தன் வீட்டை அடைவதாகச் சொல்லப்படுகிறது. அவனுக்கு மேடம் உச்ச வீடென்றும், தனுசு நட்பு வீடென்றும் சொல்லப்படுகின்றன. மேட சிம்ம தனுசுக்கு ஒரு திரிகோணமென்பது பெயர். சூரியன் கன்னியில் நுழையும் காலமாகியும் புரட்டாசிமாதமானது புவனத்தினிலுள்ள சக்திகளெல்லாம் விகாசத்தை அடைகின்ற காலம். அதாவது புரட்டாசி மாதத்தில் சூரிய கிரணங்களின் பயனும் பூமியிலுள்ள பலவித பௌதிக சத்திகளும் சம்பந்தப்படுவதினுல் எல்லாப் பொருள்களும் விருத்தியடைய ஆரம்பிக்கின்றன.

"இவ்வுலகத்தில் பிரவர்த்தியை யுடையவர்களாய் காமிய கிருத்தியங்களை வகிக்கும் உயிர்கள் அவரவர்கள் விரும்புகிற காம பலன்களையடை

வதற்கு கன்னியை யடைந்த சூரியன் மூலமாக மாய அவச்சின்னனாகிய சகுணேசுவரனை ஆராதிக்கிறார்கள். அந்த ஆராதனைக்கு கன்னியும் சூரியனும் சேருகின்ற புரட்டாசி மாதமே பொருத்தமாகக் கருதப்பட்டகாலம் இந்த ஆராதனை புத்தியினால் அதாவது சிறத்தையோடு அநுஷ்டிக்கப்பட வேண்டியதாகையால் புத்திக்கு அதிட்டான சத்தியாகிய புதனுக்கு கன்னியை ஆட்சி வீடாகவும் மூலத்திரிகோண வீடாகவும் சொல்லப்படுகிறது. இம்முறையாகவே ஞானத்தைக் குறிக்கின்ற தனுசில் சூரியனிருக்கும் பொழுது அதாவது மார்கழிமாதமானது விருப்பற்றுச் செய்கிற நிஷ்காமிய பூசைக்குரிய காலம். இந்த உபாசனை ஞானத்தினால் அதாவது வித்தையோடு அனுஷ்டிக்கப்படவேண்டிய தாகையால் ஞானத்துக்கு அதிட்டான சத்தியாகிய வியாழனுக்கு தனுசை ஆட்சி வீடாகவும், மூலத்திரி கோண வீடாகவும் சொல்லப்படுகிறது. தனுர் மாத பூசையும், ஆருத்திரா தெரிசனமும், வைகுண்ட ஏகாதசியும், மார்கழி மாதத்தில் அனுஷ்டிக்கப் படுவதைக் காணலாம்.

"ஆகவே மேலே விவரித்தபடி ஆத்மாவுக்கு பிரோகனான சூரியன் புத்திக்குப் பிரோகனான புதன் வீடாகிய கன்னியிலிருக்கும் காலம், அதாவது புரட்டாசி மாதமானது காமியமான ஆராதனைகளுக்கு பொருத்தமான சமயமென்று கைக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இது 'பூரண சந்திரோதயம்' என்ற பத்திரிகையின் கி. பி. 1910, 1911 ல் வெளிவந்த முதற்றொகுதி பக்கங்கள் 259-268, 334-341ல் "மகாலய பக்ஷமும் நவராத்திரியும்" எனத் தலைப்பிட்டு திரு. P. S. சுப்பிரமணிய ஐயரவர்கள் விவரமாக எழுதியிருப்பதிலிருந்து தொகுக்கப்பெற்றது. இதனால் நவராத்திரி விழா புரட்டாசி மாதத்தில் தான் நடைபெறவேண்டுமென்பதும் உயிருக்குத்தலைவனாகிய சூரியன் புத்திக்குத்தலைவனாகிய புதனுடைய ஆட்சி வீடாகவும் மூலத்திரி கோண வீடாகவுமுள்ள கன்னியா ராசியில் இருக்கின்ற காலமாகிய புரட்டாசி மாதத்திலேயே பிள்ளைகளுக்கு ஏடு தொடங்குதல் விழா நடைபெற வேண்டுமென்பதும் தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம்.

இ. மு. சுப்பிரமணியபிள்ளை.

மீரானியா பிரஸ், திருநெல்வேலி. 7—31.

சிவாய பரப்பிரம்மணே நம :

அகில பாரத ஆதிசைவ பிராமண மகாஜன சபா.

1925-ம்ஸ்ரீ ஜூன்மீ 11-உக்குச் சரியான குரோதனஸ்ரீ வைகாசிமீ 29உ வியாழக்கிழமை தினம் திருமதுக்கூரில் நடந்த விவாக காலத்தில் இரும்புதலை பிரம்மஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சிவாச்சாரியார் அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் நடந்தேறிய ஷை சபா மீட்டிங்கில் இதனடியில் கையொப்பமிட்டிருக்கிற மெம்பர்களுக்கு முன்பாக ஏகமனதாய் தீர்மானிக்கப்பட்ட விஷயங்கள்:-

(1) இவ்வருஷத்தில் சிராவணம், சிவராத்திரி, தீபாவளி முதலான விசேஷங்களை முறையே சிராவணத்தை ஆனி, ஆடி, ஆவணி மாதங்களிலும், சிவன்ராத்திரியை தை, மாசி மாதங்களிலும், தீபாவளியைப் புரட்டாசி மாதத்திலும் அனுட்டிக்கவேண்டுமென்று சாந்திரமானப்படி சகல பஞ்சாங்கங்களிலும் அச்சிடப்பட்டிருக்கின்றன. அது சரியல்ல.

(2) ஞானமோக்ஷ பரவித்யா சாஸ்திரமாகிய சிவாகமங்களில் சௌரமானத்தில்தான் சகல விசேஷங்களையும் நடத்தவேண்டுமென்றும், மற்ற சாந்திரசாவனங்களில் செய்யப்படும் விசேஷங்கள் மத்திம, அதமமென்றும் சொல்லப்படுகின்றன. ஆகையால் சகலரும் முதல் பாராவில்கண்ட மூன்று விஷயங்களையும் முறையே ஆவணி, மாசி, ஐப்பசி மாதங்களில் ஆலயங்களில் செய்கிறபடி சகல கிரஹங்களில் அனுஷ்டிக்கும்படி ஷை சபையார் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

(3) ஸ்ரீசங்கராசார்ய சுவாமிகள் ஸ்ரீமடத்தில் பிரசுரமாகும் ஆரியதர்மம் என்கிற பத்திரிகையில் தீபாவளி விஷ்ணுவைச் சேர்ந்தது அதை ஆதிசைவப் பிராம்மணர்கள் அனுஷ்டிப்பது சரியல்ல என்று வரையப்பட்டிருக்கிற விஷயம் இதை எழுதினவர்களின் ஆகம சாஸ்திரங்களின் ஆராய்ச்சியின்மையையும் அவர்கள் அனுஷ்டானங்களையும் தெரிந்துகொள்ளாத விஷயமே தவிர வேறல்ல. சிவலிங்க ஸ்வரூபமானது பிர்மா, விஷ்ணு, ருத்திரன், மும்மூர்த்திகளும் ஒன்று சேர்ந்த ஸ்வரூபம். மேலும் அவர்கள் சிரார்த்தங்களில் விஷ்ணுவர்ணம் வைக்கிற வழக்கம் உண்டு. ஆனதினால் அவர்கள் தீபாவளியை உசிதமே ஒழிய வேறல்ல.

(4) தைமீ 1உ அமாவாசை சொச்சத்தில் சகல ஆலயங்களிலும் தீர்த்த உத்சவம் செய்யப்படவேண்டியது.

(5) முதல் பாராவில்கண்ட பிரம்மஸ்ரீ இரும்புதலை கிருஷ்ண மூர்த்தி சிவாசாரியார் அவர்களே இந்த சபை நிரந்தர அக்கிராசனாதிபதியாக கமிட்டிமெம்பர்களால் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

குறிப்பு:— ருதிரோத்காரிவஷு ஆவணிமீ கோனேரிராஜபுரத்தில் நடந்த கும்பாபிஷேக மத்தியில் என்ன தோஷமிருப்பினும் ஆவணி மாசத்திலேயே உபாகர்மா செய்யவேண்டுமென பல வித்வான்கள் முன்பாக தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அந்த தீர்மானம் நமது சபையின் புக்பாரத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. அதையும் அனுசரித்து இந்தத் தீர்மானமும் செய்யப்பட்டு அச்சிடப்பட்டது.

பிரம்மஸ்ரீ

திருநல்லூர் மு. சந்திரசேகாகுருக்கள்
பாமணி சுவாமிநாத குருக்கள்
எண்கண் பொன்னையா குருக்கள்
அரகண்டநல்லூர் சு. நடராஜகுருக்கள்
செட்டியார்குறிச்சி சா. சுப்பிரமணிய குருக்கள்
கெழுவத்தூர் வேதையா குருக்கள்
தலைநாயர் முத்துச்சாமி குருக்கள்
திருவாய்மூர் வைத்தியநாத குருக்கள்
செந்தாமரைக்கண் சாமிநாதகுருக்கள்
வேதாரண்யம் சுப்பிரமணியகுருக்கள்
கீழக்கமுவங்குடி G. சாமிநாத குருக்கள்
களப்பாள் சுப்பிரமணியகுருக்கள்
அய்யாவாடி பஞ்சநத குருக்கள்
திருநெல்லிக்காவல் மகாதேவ குருக்கள் (கமிட்டி மெம்பர்)
குலமணிக்கம் பஞ்சாமிகேசகுருக்கள்
பழையனூர் சா. சோமையாகுருக்கள்

பிரம்மஸ்ரீ

வேதாரண்யம் சந்திரசேகர குருக்கள்
சிகார் மகாதேவ குருக்கள்
வடபாதிமங்கலம் சதாசிவ குருக்கள்
எண்கண் வெங்கட்ராம குருக்கள் (கமிட்டி மெம்பர்)
நாகபட்டணம் பஞ்சாமிகேசகுருக்கள்
சாட்டியக்குடி ராமய்யா குருக்கள்
மணக்கரை வைத்தியநாத குருக்கள்
இடையாத்தங்குடி கணபதிகுருக்கள் திருச்சி.
பூலாங்குடி வைத்தியநாத குருக்கள்
ராதாநல்லூர் நடேசகுருக்கள்
திப்ராஜபுரம் சாமிநாத குருக்கள்
சிறுவாமணி வியாக்கிர குருக்கள்
மன்னார்குடிபட்டி என்கிற சிதம்பர குருக்கள்
இடும்பாவனம் சாம்பசிவ குருக்கள்
அதங்குடி சா. சுந்தர குருக்கள்

பிரம்மஸ்ரீ இரும்புதலை கிருஷ்ணமூர்த்தி சிவாசாரியாரவர்கள்
தலைவர்.

பிரம்மஸ்ரீ நாகபட்டணம்
நா. சா. சுப்பிரமணிய யோகீசுவரரவர்கள்—காரியதரிசி.

S. S. P. N. 25—348. 11—6—25.

இது நாகை S. S. பிரசில் அச்சிட்ட பிரதிக்குச் சரியான படியோலை. (True copy)

மேலேகண்ட அகிலபாரத ஆதிசைவ பிராமண மகாஜன சங்கத்தின் தீர்மானங்களால் திருக்கோயில்களிலும், வீடுகளிலும் விழாக்களெல்லாம் விரதங்களெல்லாம் சௌரமானப்படிதான் நடைபெறவேண்டுமென்னும் உண்மை நிலைபெறுகின்றமை காண்க.

இ. மு. சுப்பிரமணிய பிள்ளை,
திருவாவடுதுறை, தருமபுர ஆதீனங்களின்
சோதிடவித்வான்.

29—7—31.

மீரானியா பிரஸ், திருநெல்வேலி. 8—31.

ஓம்

❀ விநாயக சதுர்த்தியும், நவராத்திரி உத்ஸவமும்.

ச்ராவணமாதத்துச் சதுர்த்தியில் விநாயகருக்கு ரதோத்ஸவத்தைச் செய்யவேண்டும். அதே தினத்தைத் தீர்த்ததினமாகக் கற்பித்துக் கொள்ளலாம்; பஞ்சமியையும் தீர்த்ததினமாகக் கற்பித்துக் கொள்ளலாம் என்ற சுவாயம்பு வாகமத்திற்குச் சிலர் கூறும் தாத்பரியம் வருமாறு:—

"உத்ஸவ ப்ரகரணங்களில் சைத்ர வைசாகாதி சப்தங்களால் மாதங்களைக் குறிப்பிட்டு இருப்பதுகொண்டு சாந்திரமானத்திற்கே சைத்ரம், வைசாகம், ச்ராவணம் முதலிய சப்தங்களால் வ்யவகரித்தல் பொருந்தும். ஸ்மிருதி முக்தாபலத்திலுள்ள மேஷாதிஸ்தே ஸவிதரியோ யோதர்ச: ப்ரவர்ததே | என்னும் ச்லோகமும் சைத்ராதிசப்தங்கள் சாந்திரமானப் பெயர்களாகும் என்று கூறுகின்றது. விநாயகசதுர்த்தி யுத்ஸவத்தைக் குறிப்பிடும் சுவாயம்புவ வாக்யத்திலுள்ள ச்ராவணே என்னும் பதத்தைச் சாந்திரமானமாகக் கொண்டால் சென்ற ஒவ்வொரு ஆடிமாதங்களிலும் விநாயக சதுர்த்தியை நடத்தியிருத்தல்வேண்டும். அதுவோ கிடையாது. பாத்ரபதத்தில் அனுட்டிக்க வேண்டுமென்று கல்பாதிகளில் கூறப்பட்டிருக்கின்றது. பாத்ரபதத்தைச் சாந்திரமான்மாகக்கொண்டு நடத்துமுறையில் ஆவணியில் அனேகமாக நடத்த நேரிடுமானதால் ஸௌரமானத்தைக் கருதி ச்ராவணே என்னும் பதத்தை ப்ரயோகித்தார் என்று சுவாயம்பு வாகமத்திற்குக் கதி கல்பித்துக்கொள்வோம்.

இவ்வாறின்றி சிம்மத்தில் சூரியன் இருக்கும்பொழுதுதான் விநாயக சதுர்த்தியை நடத்தவேண்டும் என்று ஒரே நியமம் கொள்

❀ இக் கட்டுரை, விபவ ஆவணி உகூ-உ (10—9—1928) வெளிவந்த பலவான்குடி, "சிவநேசன்" (ஆண்டு உ, வாரம் ச) என்னும் பத்திரிகையில் உள்ளது.

ளப்பட்டது. அதிமாஸம் ஏற்பட்ட சமயங்களில் புரட்டாசியிற்ருன் சதுர்த்தியுத்ஸவம் நடைபெற்றிருக்கின்றது. ஸௌரம் ச்ரேஷ்டம் என்று கூறிய ஆகமவாக்கியங்கள் சைத்ராதி சப்தங்களை சாந்திரமானமாகக்கொண்டு உத்ஸவத்தை நடத்துமுறையில் ஸௌரசம்பந்தம் உத்ஸவங்களுக்கு ஏற்படுங்கால் விசேஷம் என்னும் கருத்துடையன. இவ்வாறின்றி சுவாயம்பு வாகமத்திலுள்ள ச்ராவணபதத்தை ஸௌரமானமாகக்கொண்டு விநாயக சதுர்த்தி யுத்ஸவத்தை நடத்தினுல் காரணுகமத்தில் நவராத்திரி யுத்ஸவப் படலத்திலுள்ள ஆச்வயுஜ பதத்திற்கும் சௌரமானத்தை யன்றோ கொள்ளவேண்டும். ஐப்பசியில் நவராத்திரியை எங்கேயாவது ஒவ்வொரு வருஷமும் நடத்தியிருப்பதுண்டா? ஆதலால் காரணுகமத்திலுள்ள ஆச்வயுஜ பதம் வேறுவிதமாகப் பொருந்தாததுகொண்டு சுவாயம்புவத்திலுள்ள ச்ராவண பதத்திற்கு அநேகமாக ஆவணியில் நடத்தநேரிடுவதே ப்ரயோஜனம். ஆகவே, 'இந்த விபவஸு புரட்டாசியில் விநாயகசதுர்த்தி யுத்ஸவத்தையும் ஐப்பசியில் நவராத்திரியையும் ஆலயங்களில் நடத்துவதே முறை' என்பதாம்.

இக்கூற்று ஆகமசம்பிரதாயத்திற்கு முற்றிலும் மாறுபட்டபடியால் ஈண்டு இவற்றிற்கு விடைகூறுதும்.

"முனிகளின் வாக்யத்தில் ஒரு அக்ஷரங்கூட அப்ராமண்யத்தை சஹிக்காது. இவ்விதமிருக்க ஈசுவர வாக்யத்தைப் பற்றிப் பேசுவானேன். ஈசுவ வாக்கியத்தை அர்த்தவாத வாக்யமாகக்கூடக்கொண்டு அதற்குப் ப்ராமாண்யங் கற்பித்தல் பெருந்தீங்கிற்கிடமாமென திவ்யாகமங்களனைத்தும் முறையிடுகின்றன" என்று சிவார்ச்சனு சந்திரிகையில் அப்பய்யதீக்ஷிதர் கூறியுள்ளார். (சிவார்ச்சனு சந்திரிகை 115–வது பக்கம்பார்க்க) ஆகவே சூக்ஷுமாகமம் பூர்வகாரணம் உத்தரகாரணம் உத்தரகாமிகம் ஆகிய இந்த நூல்களிலுள்ள மகோத்ஸவவிதிப் படலங்களில் அடங்கிய சுலோகங்கள் 'ஸௌரமானம் சிரேஷ்டம்; சாந்திரமானம் மத்யம்; சௌரத்தில் எல்லா வுத்ஸவங்களையும் செய்,' என்று ஸ்பஷ்டமாக வாய்விட்டுக் கூறியிருக்கவும் சுவாயம்புவத்திலுள்ள ச்ராவண பதத்தை சங்கோசம் செய்து சௌரமானத்திற்கு மேன்மையைக்கூறும் இந்த சூக்ஷுமாகமம் முதலிய ஆகம வாக்

கியங்களுக்கு கதி கல்பித்ததானது, சுவாயம்புவத்தில் தெளிவாகக் கூறப்பட்ட ச்ராவணபதத்தையும் ஸௌரமானத்திற்கு மேன்மையைப் பாலருமறியுமாறு கூறிய சூக்ஷ்மாகமம் முதலிய ஆகமங்களின் வாக்கியங்களையும் வெகு தூரத்தில் தள்ளினதாக முடியும். ஆகவே அப்பயதீக்ஷிதர் கூறிய கூற்றுக்குப் பாத்திரமாக வேண்டியதுதான்.

இனி சாந்திரமானத்திற்கே சைத்ரம் வைசாகம் முதலிய சப்தங்களால் வ்யவகாரம் உண்டு என்பதைப்பற்றி ஆராய்வாம். வியாகரணம் உபமானம் கோசம் ஆப்தவாக்யம் இவற்றால் பதார்த்த க்ஞானமானது உண்டாகின்றது. அமரகோசத்தில் "ச்ராவணே துஸ்யாத் நபா ச்ராவணிகச்சஸ," என்று நபா; என்னும் பதத்தையும் ச்ராவண என்னும் பதத்தையும் பர்யாயப் பெயர்களாக அமரஸிம்மர் கூறியிருக்கிறார். இதன் டீகையில் சிராவண நக்ஷத்திரத்துடன் கூடிய பௌர்ணமீ இந்த மாதத்தில் இருப்பதால் ச்ராவணம் எனப் பெயர் உண்டாயிற்று எனக் கூறப்பட்டிருக்கின்றது. ச்ராவண நக்ஷத்திரத்துடன் கூடிய பௌர்ணமீ மற்ற மாதங்களில் இருப்பினும் ஆவணியில் ச்ராவணம் இருந்தால், அந்தத் தினத்திற்கு விசேஷமென்பது பற்றி ஆவணி மாதத்திற்கு சிராவணமென அமரகாரர் பெயர் இட்டிருக்கிறார். இவ்வாறே சித்திரை முதலிய மாதங்கட்கு சைத்ரம் முதலியன பெயர்களாகவும் மது மாத வாதி சப்தங்கள் சைத்ராதி சப்தங்கட்குப் பரியாயங்களாகவும் அமரகாரர் கூறியிருக்கின்றார். நக்ஷத்ரேண யுக்த: கால: என்னும் சூத்ரமியற்றிய பாணிநியும் சாந்திரமானத்திற்குப் பெயர் எனக் கூறவில்லை. ஸ்மிருதி முக்தாபலமென்னும் நூல் ஆலயோத்ஸவாதிகால நிர்ணயங்களுக்கு ப்ரமாணமில்லை. ஆகையால் அதைப் பிரமாணமாகக்கொண்டு ஆகம நூல்களில் உத்ஸவப் பிரகரணங்களில் அடங்கிய சைத்ரம் ச்ராவணம் முதலிய சப்தங்கட்கு சாந்திரமானமே அர்த்தம் என்று கூறலாகாது.

அன்றியும் சாந்திரமானத்தில் உத்ஸவம் செய்வது சிவபிரானுக்கு விசேஷ உடன்பாடாயின் துவஜாரோகணம் முதற்கொண்டு தீர்த்த மீறாக நடத்தப்படும் ஸாகல்ய மென்னு முத்ஸவத்தையும், துவஜாரோகண மாத்ரமின்றி எஞ்சிய உத்ஸவக்

கிரியைகளனைத்தையுமுடைய பாவனமென்னு முத்ஸவத்தையும் ஸௌரமானப்படி செய்; பலிஹோமமின்றி நடத்தப்படும் சாந்திகமென்னும் உத்ஸவத்தையும் யஜமானரின் இச்சையால் நடத்தப்படும் மாங்கல்யமென்னு முத்ஸவத்தையும் சாந்திரமானமாகச் செய்; என்று கூறி இறுதியில் எல்லாவித உத்ஸவங்களையும் ஸௌரமானப்படி செய் என்று ஏன் சூக்ஷ்மாகமம் காரணாகமம் காமிகாகமங்களில் கூறவேண்டும்.

அன்றியும் ஆண்டு சைத்ர வைசாகாதி சப்தங்களால் அந்தந்த மாதங்களில் உத்ஸவங்களை நடத்தும்படி கூறிய பின்னரல்லவா ஸௌரமானம் மேல்; சாந்திரமானம் தாழ்வு, ஸௌரமானப்படி உத்ஸவங்களைச் செய் என்று கூறப்பட்டிருக்கின்றது. சைத்ரம் வைசாகம் முதலிய சப்தங்களால் சாந்திரமானத்தைச் சிவபிரான் கொண்டிருப்பின் சைத்ராதி சப்தங்களால் வ்யவகரித்து பின் ஸௌரம் மேல் என்று சொல்வது பொருந்துமா வென்பதை வாசகர்களே தெளிந்துகொள்க.

பகவான் மேஷம் முதலிய ராசிப்பெயர்களால் அநேகமாக ஆண்டு வ்யவகரிக்காத காரணமோ வெனின் தீர்த்தம் கொடுத்தற்கு பர்வா கூடுவதும் கூடாததும் அவ்யாவர்த்தகம். அந்த அந்த மாத நக்ஷத்ரமே முக்யம் என்று ஆங்காங்கு தெளிவாகக் கூறிய தனது வாக்யங்களை சைத்ராதி சப்தங்களாலும் கூறி வற்புறுத்தற்கேயாம்.

உத்தர காரணாகமத்தில் "மேஷஸம்க்ஞகே" என்று ஒரு இடத்தில் மாத்ரம் சித்திரை மாசத்தைக் குறிப்பிடுதற்கு ராசிப் பெயரால் பகவான் என் வியவகரிக்க வேண்டுமெனின் கூறுகிறோம். காவ்யநாடகாதிகளில் இலக்கணம் கடந்த பிழை சப்தம் இருப்பின், மகாகவிகள் வச்யவாக்குக்களானதால் தோஷமில்லை என்று கூறுகிறோம். வியாகரணம் முதலிய நூல்களிலும் முனிவர் சுதந்திரர் ஆனதால் அவர்களைக் கட்டுப்படுத்த முடியாது என்று கூறுகிறோம். அவ்வாறாகவும் கவிகளுக்கு அநாதி கவியாயும், முனிவருக்கு அநாதிமுனியாயுமுள்ள பகவான் பிழையற்ற மேஷசப்தத்தால் ஆண்டு, தான் சுதந்திரனாதலால் வியவகரித்தது

மற்ற வைசாகம் முதலிய சப்தங்கள் ஸௌரமானப்படியுள்ளவை என்பதற்கு உபோத்பலகமே ஒழிய பாதகமில்லை.

பாத்ரபதத்தில் (=புரட்டாசியில்) விநாயகரின் உத்ஸவத்தை நடத்த ஆகமம் இடங்கொடுக்கவில்லை. சுவாயமபுவாகமத்தில் "சிராவணே" என்றுதான் இருக்கின்றது. இங்குள்ள ச்ராவண பதத்திற்குச் சாந்திரமானத்தைக்கொண்டால் ஒவ்வொரு ஆடி மாதங்களிலும் விநாயகசதுர்த்தி யுத்ஸவத்தை நடத்தியிருத்தல் வேண்டும். சாந்திரமானத்தை உத்ஸவப் பிரகரணங்களில் உத்தமமாகக் கொள்ளாத ஆகமிகர்களுக்கு அதிமாஸ தோஷம் பாதிக்காது. ஆதலால் எக்காரணங்கொண்டு ஆகமிகர்கள் இந்த விபவ வருஷம் புரட்டாசியில் விநாயகசதுர்த்தி யுத்ஸவத்தை நடத்தவேண்டுமோ அறியோம்.

பாத்ரபத சுத்தத்தில் அனுட்டிக்கவேண்டு மென்றுதான் கல்பாதிகள் கூறுகின்றன. அதிமாஸ தோஷம் நேரிடும் சமயங்களில் எல்லாம் புரட்டாசியில் விநாயகசதுர்த்தியுத்ஸவம் ஆலயங்களில் நடைபெற்றிருக்கின்றது என்பார்க்கு விடைகூறுகின்றோம்

பரமசிவனது ஆலயத்தின் வழிபாடுகளுக்குச் சிவாகமமே இன்றியமையாதது. அச் சிவாகமங்களின் கருத்துக்கிணங்க கல்பாதிகளும் சிவாலய வழிபாடுகளுக்கு உரியனவாகும். இவ்விதமின்றி கல்பாதிகளின் கருத்துக்கிணங்க சிவாகமங்கட்கு அர்த்தங் கூறுவது சரி எனத் தோன்றவில்லை. கதாநுகதிகோலோக: (இதன் பொருள்— உலகம் செல்லுகின்றவனைப் பின்பற்றுகிறது) என்ற நியாயப்படி உலகம் அநேகரைப் பற்றிச் செல்லுகின்றது. சிலர் உண்மையை அறிந்திருப்பினும் அவர்களும் சாஸ்திரத்தின் உண்மையைப் புகட்டிவிட்டு தாம் மகா ஜனோயேநகதஸ்ஸபந்தா: (இதன் பொருள்- மகா ஜனங்கள் எந்தவழி செல்லுகின்றனரோ அதுவே வழி) என்னும் வாக்கியத்தைச் சொல்லிக்கொண்டு அநேகரைப் பின்பற்றுகின்றனர். உலகத்தில் எந்தெந்த மதங்களுக்கு எந்தெந்த விதமாக ப்ராமாண்யத்தைக் கற்பிக்க வேண்டுமோ, அவ்வாறு கற்பித்தல் காணப்படவில்லை. சில அனுட்டானங்கள் கலிகாலத்தால் வர வர மாறுமேயன்றி எழுதி வைத்த சாஸ்திரம் மாறாது. இனி அதுவும் மாறலாம். ஆஹ்னிக காண்

டத்தில் கூறப்பட்ட விதிப்படி அனேகமாக ஒருவரும் அனுட்டிக்கவில்லை என்பதுகொண்டு அதற்கு எவ்விதம் அப்ராமாண்யத்தைக் கற்பிக்க முடியாதோ, அவ்வாறே சுவாயம்புவாகமத்திலுள்ள ச்ராவணபதத்திற்கு உபசாரஅர்த்தங்கூறி சௌரமானத்திற்கு ஸ்பஷ்டமாக மேன்மையைக் கூறிய வாக்யங்களுக்கு அப்ராமண்யத்தைக் கற்பிப்பது பொருந்தாது. சாஸ்திரத்தைக் கொண்டு உலகாநுபவத்தை மாற்றுவது தர்மமே ஒழிய உலகாநுபவத்தைக்கொண்டு சாஸ்திரங்களுக்கு உபசார அர்த்தங்கள் கூறுவது தர்மமாகாது. இது நிற்க

உத்ஸவ ப்ரகரணங்களிற் கூறப்பட்ட சைத்ரம் சிராவணம் முதலிய பதங்களுக்கு ஸௌரமானத்தைக் கொண்டால் காரணாகமத்தில் நவராத்திரிவிதிப் படலத்திலுள்ள ஆச்வயுஜபதம் பொருந்தாது. நவராத்ரி யுத்ஸவத்தை ஒவ்வொரு ஐப்பசியிலன்றோ செய்ய நேரிடும் என்பார்க்கு கூறுகிறோம். அகோர சிவாசாரியார் இயற்றிய மகா நவமீ பூஜாவிதி என்னும் நூலில் "மாஸி பாத்ரபதேபக்ஷே சுக்லேப்ரதி பதாதிகம். நவம்யந்தம் விசேஷேண பூஜயித்வாமகேச்வரீம்." என்று ஓர் ச்லோகம் இருக்கிறது. காரணாகமத்தில் "ஆச்வயுக் சுக்லபக்ஷேது ப்ரதி பந்நவம்யந்தகே ப்ரதி பத்தினமாரப்ய வ்ரதோத்ஸவமதாசரேத்." என்று ஓர் சுலோகமிருக்கின்றது. நவமீ பூஜாவிதியில்உள்ள ச்லோகத்திற்கு பாத்ரபத மாசத்தில் நவராத்ரி உத்ஸவத்தை நடத்தவேண்டுமெனப் பொருள். காரணாகமத்திலுள்ள ச்லோகத்திற்கு ஆச்வயுஜ மாஸத்தில் நவராத்திரி உத்ஸவத்தை நடத்தவேண்டுமெனப் பொருள்.

மகா நவமி பூஜாவிதியிலுள்ள சுலோகத்திற்கு ஆதாரமான மூலாகம ப்ரமாணம் உத்தரகாமிகமேயாகும். அங்குள்ள துர்க்கா பூஜாவிதிப்படலத்தில், கந்யாக தேஸவிதரி சுக்லபக்ஷேஷ்டமீ யுதா | மூல நக்ஷத்ர ஸம்யுக்தா ஸாமகா நவமீஸ்மிருதா | என்று ஓர் சுலோகம் இருக்கின்றது. இதன் பொருள் "சூரியன் கந்நியாரர்சியை அடைந்த சமயத்தில் நேரும் சுக்ல பக்ஷத்து அஷ்டமியுடனும் மூலநக்ஷத்ரத்துடனும் கூடிய நவமியே மகா நவமியாகும்" என்பதாம். மகாநவமீ பூஜாவிதிநூலிலுள்ள மாஸி பாத்ரபதே என்னும் தொடக்கத்தை உடைய சுலோகத்திறகு

ஆதாரமான இந்த கந்யாகதேஸவிதரி என்னும் சுலோகத்தை உணர்பவர்க்கு ஸௌரமானத்தைக்கொண்டே நவராத்திரியை நடத்தவேண்டு மென்பது செவ்வனே விளங்கும். உத்தராகாமிகத்திலுள்ள கந்யாகதேஸ விதரி என்னும் இந்த சுலோகத்திற்குப் பின்னுள்ள "ஆச்வயுக் சுக்லபக்ஷேவா அஷ்டமீ மூல ஸம்யுதா | ஸாமகா நவமீக்ஞே யாத்ரை லோக்யேதி சுதுர்லபா |" என்னும் இந்த சுலோகம் அரசருக்கே உரிமையாகுமென்பதும் உத்தரகாமிகத்திலுள்ள துர்க்கா பூஜாவிதிப் படலத்தை யுணர்பவருக்கு இனிது விளங்கும்.

இவ்வாறு நவமி பூஜாவிதியில் உள்ள வாக்யத்திற்கு ப்ராமாணியம் சித்திக்கவே அந்த நூலில் அடங்கிய பாத்ரபத பதத்திற்குச் சாந்திரமானத்தைக் கொண்டால் ஒவ்வொரு ஆவணியிலும் மகா நவமியை நடத்தியிருக்க வேண்டும். நடத்தியிராதது கொண்டு மகா நவமி பூஜாவிதியிலுள்ள பாத்திரபத பதத்திற்குச் சௌரமானத்தையே கொள்ளவேண்டும். காரணாகமத்திலுள்ள ஆச்வயுஜ பதத்தை ஸௌரமானமாகக் கொண்டால் ஒவ்வொரு ஐப்பசியிலும் நடத்தியிருக்கவேண்டும். அவ்வித மில்லாமையால் அங்குள்ள ஆச்வயுஜ பதத்தைச் சாந்திரமானமாகவே கொள்ளவேண்டும்; நவராத்திரி உத்ஸவத்தை ஒரு இடத்தில் ஸௌரமானமாகவும் பிறிதோரிடத்துச் சாந்திரமானமாகவும் எவ்வாறு கொள்ளலாமெனின் கூறுதும். ஒரே நவராத்ரி யுத்ஸவமே தன் உட் பிரிவால் வெவ்வேறு விதமாக அனுட்டிக்கப் படுமாறு நவமி பூஜாவிதி நூலும் காரணாகமமும் கூறுகின்றன. அதாவது:— சூக்ஷ்மாகமம் காரணாகமம் ஆகிய இரண்டிலும் உள்ள மகோத்ஸவ விதிப் படலங்கள் பலி ஹோமங்களுடன் உத்ஸவத்தை நடத்தினுல் அந்த உத்ஸவம் ஸௌரத்திலேயே நடத்தப்படவேண்டுமென்றும், பலி ஹோமங்களின்றி நடத்தப்படு முத்ஸவங்கள் சாந்திரத்திலும் செய்யப்படலாமென்றும் கூறுகின்றன. நவமி பூஜாவிதி நூலிலோ ஹோமகார்யங்களுடனே தான் நவராத்ரி பூசை சிறப்பாகக் கூறப்படுகின்றது. ஆதல் பற்றியும் அங்குள்ள பாத்ரபத பதத்திற்குச் சௌரமானத்தையே கொள்ளவேண்டும். காரணாகமத்தில் ஹோமகார்யங்களுடனும் ஹோமகார்யங்களல்லாமலும் இரண்டுவிதமாக நவராத்

ரியை அனுட்டிக்கலாமெனக் கூறுவதால் அங்குள்ள ஆச்வயுஜ பதம் அங்குக் கூறப்பட்ட பலி ஹோமமல்லாது கல்பரீதியாக வுள்ள உத்ஸவத்திற்கே விதாயகமாகும். ஆனால் ப்ரதமாதிக்ர மணை காரணுபாவாத் (முதலாவதுள்ளதை அக்ரமிப்பின் காரணம் வேண்டுமென்பதாம்) என்னும் நியாயத்தைக்கொண்டால் காரணுகமத்தில் முதலாவது ஹோமகார்யங்களுடன் செய்யப்படும் நவராத்திரி உத்ஸவமே கூறப்பட்டிருப்பதால் ஹோமகார்யங்களுடன் செய்யப்படும் நவராத்ரி யுத்ஸவத்திற்கே ஆச்வயுஜ பதம் விதாயகமாகும் என ஏன் கூறக் கூடாதெனின் கூறுதும். ஆகமங்களை இயற்றிய ஒரே கடவுள் ஒரு நூலில் ஹோமகார்யங்களுடன் நவராத்ரியை பாத்ரபதத்தைச் சௌரமானமாகக்கொண்டு செய் என்று கூறிவிட்டு, மற்றொரு நூலில் அதே ஹோமகார்யங்களுடன் கூறிய நவராத்ரி யுத்ஸவத்தை ஆச்வயுஜ பதத்தைச் சௌரமானமாகக்கொண்டு செய் என்றுவது அல்லது ஆச்வயுஜ பதத்தை சௌரமானமாகக்கொண்டு செய் என்றுவது கூறுவாரா? இதுகொண்டு "ப்ரதமாதிக்ரமணே காரணு பாவாத்" என்னும் நியாயம் இங்குக்காரணம் இருப்பதுபற்றிபொருந்தாது.

ஆனால், சிலர் ஆச்வயுஜ பதத்தைச் சாந்திரமானமாகக் கொண்டு செய்யுமுறையில் அனேகமாக சௌரமானப்படி பாத்ர பத சம்பந்தம் ஏற்படுவதால் ஆச்வயுஜ பதத்தைச் சாந்திரமானமாகக் காரணுகமத்தில் பிரயோகித்தார் எனக் கூறப்படும். அவ்வாறு கூறுதல் உபசாரமே ஆகும். அதுவோ கூடாவென அப்பய தீக்ஷிதர் கூறியுள்ளார் என்று முன்னரே கூறியிருக்கிறோம்.

அன்றியும், அதிமாசம் ஏற்பட்ட சமயங்களிற்றான் இப்பேர்ப்பட்ட சங்கடங்கள் நேரிடுகின்றன. சங்கடங்களை நீக்கும் சிவபிரான், சங்கடங்களை விளைவிப்பதற்காக ஒரே விதமான நவராத்ரி உத்ஸவத்தை ஓரிடத்தில் சௌரமானமாகவும் பிறிதோரிடத்துச் சாந்திரமானமாகவும் சொல்லுவாரா? இது நிற்க,

காரணுகமத்தில் ஹோம காரியங்களுடன் நவராத்ரி யுத்ஸவத்தைக் கூறிய பிறகே ஏன் ஆச்வயுஜ பதத்தைப் பிரயோகித்திருக்கக்கூடாது என்று சிலர் கூறக்கூடும். அதற்கு

விடை வருமாறு:- இதர சாஸ்திரங்களில் ஸிம்மாவலோகன நியாயத்தை ஒப்புக்கொள்வதுபோல் ஈண்டும் அந்த நியாயத்தை அங்கீகரிக்கின்றோம். ஆகவே காரணாகமத்திலுள்ள ஆச்வயுஜ பதம் பலிஹோமங்களின்றி கல்பரீதியாகச் செய்யும் வண்ணம் கூறும் நவராத்ரி உத்ஸவத்திற்கே உபயோகப்படுகின்றது.

ஆகவே இறுதியில் கூறுவதாவது:—

துவஜாரோகணம் முதற்கொண்டு தீர்த்தம் முடிவாக நடத்தப்படும் விநாயகசதுர்த்தி யுத்ஸவத்தையும் துவஜாரோகணம் மாத்ரமில்லாமல் எஞ்சிய உத்ஸவ க்ரியைகளனைத்தையும் உடைய விநாயகசதுர்த்தி யுத்ஸவத்தை அவச்யம் ஸௌரமானப்படி ஒவ்வொரு ஆவணியிலுமே நடத்தவேண்டும். பலி ஹோமமின்றி நடத்தப்படும் விநாயகசதுர்த்தியுத்ஸவத்தை பாத்ரபத சுத்தத்திலும் செய்யலாம். ஆனால் இந்த உத்ஸவத்தையும் ஸௌரத்தில் நடத்துவது மேன்மை. இவ்வண்ணமே ஹோமகார்யங்களுடன் ஆலயங்களில் நடத்தப்படும் நவராத்திரி யுத்ஸவத்தை ஒவ்வொரு புரட்டாசியிலுமே நடத்தவேண்டும். ஹோமகார்யங்களல்லாமல் கல்பரீதியாக ஆலயங்களில் நடத்தப்படும் நவராத்ரி உத்ஸவத்தை சாந்திரமானப்படி ஆச்வயுஜ சுத்தத்தில் செய்துகொள்ளலாம் இதுவே ஆகமங்களின் சாரமென்பதாம்.

சிலஆலயங்களில் விநாயகசதுர்த்தியுத்ஸவத்தை இந்தவிபவ ஆவணி 4-ம் தேதியில் அனுட்டித்திருக்கின்றனர். சில ஆலயங்களில் அதிமாஸதோஷத்தைக்கருதியோ வேறு யாது பற்றியோ இந்த விபவ புரட்டாசியில் அனுட்டிக்கப்போகின்றனர். ஆகையால் உண்மையை அறிந்த பெரியோர் இந்த வியாசத்தைக் கண்ணுற்று இதற்கு ஸாதகமாகவோ அல்லது தக்க ஆகமப் பிரமாணங்களுடன் பாதகமாகவோ பத்திரிகையில் வெளியிட்டால் அனைவருக்கும் உபகாரமாகுமென்று அறியப்படுத்துகிறேன்.

வியாகரண சிரோமணி,
சிவாகம சங்கம், தேவகோட்டை.

சுவாயம்புவாகமம்
விநாயகோத்ஸவப் படலத்தில்
கீழ்வருமாறு சுலோகங்கள் இருக்கின்றன.

1. அத வக்ஷ்யே விசேஷேண விக்னேசோ த்ஸவமுத்தமம்
ஸர்வபாபஹரம் புண்யம் ஸர்வலோக சுகாவஹம். ||

2. ஆதௌ தீர்தம் விநிச்சித்ய தத்பூர்வே பஞ்சமேபிவா
ஸப்தமே நவமேவாபி திருதீயே த்வஜமாரபேத் ||

3. புஷ்யமாஸாதி மாஸேஷு தத்தந்மா ஸர்க்ஷமேவவா
அதவாஸ்து சதுர்தச்யாம் பூதாஷ்டம் ததைவச ||

4. ச்ராவணே விக்நராஜஸ்ய சதுர்த்யாஞ்ச ரதோத்ஸவம்
தத்திநே தீர்த்தகிருத்யஞ்ச பஞ்சம்யாம் வா விசேஷத: ||

இவற்றின் பொருள்:-

1. இனி அனைவருக்கும் சுகத்தைத்தருவதாயும் பாவங்களனைத்தையும் போக்குவதாயும் மேலானதாயுமுள்ள புண்ணியமான விநாயகோத்ஸவத்தை விசேஷமாகக்கூறுகிறேன்.

2. முதலாவது தீர்த்த தினத்தை நிச்சயித்துக்கொண்டு அதற்குமுன் மூன்றாவது தினத்திலாவது, ஐந்தாவது தினத்திலாவது, ஏழாவது தினத்திலாவது, ஒன்பதாவது தினத்திலாவது துவஜாரோகணம் செய்யவேண்டும்.

3. புஷ்ய(=தை) முதலிய மாதங்களில் அந்தந்த மாதநக்ஷத்திரங்களேயும் சதுர்த்தசி கிருஷ்ணபக்ஷத்து அஷ்டமி என்னும் இவற்றையும் தீர்த்தஇனங்களாக நிச்சயித்துக்கொள்ளவும்.

4 சிராவண (=ஆவணி) மாதத்தில் விநாயருக்குச் சதுர்த்தியில் ரதோத்ஸவத்தைச் செய்யவேண்டும், அதே தினத்தில் தீர்த்தோத்ஸவத்தையும் செய்யலாம். பஞ்சமியிலும் தீர்த்தோத்ஸவத்தைச் செய்யலாமென்பது மற்றொருபக்ஷம்.

உ

திருநெல்வேலி, ஸ்ரீ நெல்லையப்பர் கோவில் வசந்தமண்டபத்தில்

ஸ்ரீலஸ்ரீ வள்ளல் சோ. சிவஞான தேசிகரவர்கள்

தலைமையின் கீழ்

6,7—10—1928 ல் கூடிய சைவப் பெருங் கூட்டத்தில்,

தேவகோட்டை, சிவாகம சங்க வித்வான்,

வியாகரண சிரோன்மணி,

K. S. சுப்பிரமணிய சாஸ்திரிகள் செய்த உபந்நியாசம்.

அன்பர்களே!

நேற்றிரவு சதுர்த்தி, நவராத்திரி, கந்தஷஷ்டி நிர்ணயம் என்ற புஸ்தகத்தைப் பார்வையிட்டேன். ஐந்தாவது பக்கத்தில் காரணகமம் நவராத்திரி விதிப்படலத்திலுள்ள 'ஆச்வயுஜ்' பதம் துலா மாசத்தையே குறிக்கும் கன்னியாமாதம் ஆகமாட்டாது என்று எழுதப்பட்டிருக்கிறது. இங்குள்ள 'ஆச்வயுஜ்' பதத்திற்குக் கன்னியா மாசமே அர்த்தம் என்று ஒருவருஞ் சொல்லவில்லை. ஆனல் 'ஆச்வயுஜ்' பதம் துலாமாசத்தையே உணர்த்தும் என்று கூறுபவர் ஒவ்வொரு வருஷத்திலும் ஏன் நவராத்திரியை ஆலயங்களில் அனுட்டிக்கக்கூடாது என்பதை மாத்திரம் அவர்களிடம் ஆக்ஷேபிக்கிறேன். அதிமாசம் ஏற்பட்ட சமயத்தில் மாத்திரம் காரணுகமத்திலுள்ள 'ஆச்வயுஜ்' பதத்தைச் சௌரமானமாகக் கொள்ளுகிறேன் மற்றச்சமயங்களில் புரட்டாசியில் செய்கிறேன் என்று மனதில் சாந்திரமானத்தையே மேற்கொண்டு வெளியில் சௌரமானத்தைக் கொள்வதுபோல் வியவகரிப்பது பொருந்துமா? காரணுகமத்திலுள்ள 'ஆச்வயுஜ்' பதத்தைச் சௌரமாஸமாகக்கொண்டால், ஒவ்வொரு வருஷத்திலும் ஐப்பசியில் நவராத்திரியை நடத்தவேண்டும் என்று கொள்ளவேண்டும், அல்லது 'ஆச்வயுஜ்' பதத்தைச் சாந்திரமாஸமாகவாவது கொள்ளவேண்டும். இவ்வாறின்றித் தமக்கு அதிமாசம் ஏற்பட்ட சமயத்தில் மாத்திரம் காரணுகமத்திலுள்ள 'ஆஸ்வயுஜ்' பதத்தைச் சௌரமாஸமாகக் கொள்ளுகிறேன் என்பது மாத்திரம் பொருத்தமாகாது. நவராத்திரி முதலிய உத்சவங்களை உண்மையாகச்

சௌரமாசப்படி அனுட்டிக்க வேண்டுமென்று வெளியில்சொல்லு வதுபோல் மனதிலும் கொண்டிருப்பவர்களுக்கு ஏன் அதிமாஸ தோஷம் நேரிடும்.

தம் நிர்ணய புத்தகத்திற் 'சைத்ரம்' முதலிய சப்தங்களுக்கு மேஷம் முதலிய ராசிகளே அர்த்தமாகும். இதற்குச் சைவகால விவேகமே பிரமாணமென்று கூறி இதன்படி காரணாகமத்தி லுள்ள 'ஆச்வயுஜ்' பதத்தைத் துலாமாசமாகக்கொள்ளுகிறேன் என்று கூறுபவர் அதே சைவகால விவேகத்திலுள்ள "ஆகமங் களில் சுபகர்மாக்களில் சௌரமானத்தையே கொள்ளவேண்டும் சாந்திரமானம் வியவகாரத்திற்காக ஏற்பட்டுள்ளது" என்னும் வாக்கியத்தையும் மேற்கொண்டு சௌரத்திலே எல்லா உத்சவங் களையும் ஏன் அனுட்டிக்கக்கூடாது.?

இவ்வாறு கூறுபவர் மகாநவமி பூஜாவிதியிலுள்ள

மாஸி பாத்ரபதே பக்ஷே சுக்லே ப்ரதிபதாதிகம்
நவம்யந்தம் விசேஷேண பூஜயித்வா மஹேச்வரீம்.

என்னும் சுலோகத்தில் உள்ள பாத்ரபத பதத்திற்கு தமி ழில் புரட்டாசி என்று வழங்கிவரும் கன்னியா மாசத்தையே கொள்ளுவார்கள். ஆகவே, அதிமாஸம் ஏற்படாத சமயங்களில் பாத்ரபதத்தை சௌரமாஸமாகக்கொண்டு உத்ஸவத்தை நடத்து கிறேன். அதிமாசம் ஏற்பட்ட சமயங்களில் காரணாகமத்தி லுள்ள ஆச்வயுஜபதத்தைச் சௌரமானமாகக் கொள்ளுகிறேன் என்று கூறி நவராத்திரியை ஐப்பசியில் நடத்த ஆகமம் இடங் கொடுக்கிறது என்று கூறுபவர் ஸௌரமான மென்பதில் ஆக்ஷே பணை இல்லாமலிருக்க அதையே பத்திரிகை தவறுமல் பிஷ்ட பேஷண நியாயப் பிரகாரம் திரும்பத் திரும்ப அச்சிடுதல் எதற்கோ என்று எழுதியது மிகை.

நவராத்திரி முதலிய உத்ஸவங்களைச சாந்திரப்படிசெய்ய ஆகமம் இடங்கொடுத்தாலல்லவோ உலகாநுபவத்திற்கும் ஆக மங்கட்கும் இணங்க இவ்வாறு சிரமம் எடுத்துக்கொள்ளவேண் டும். சௌரமானம் சிரேஷ்டமென்னும் வாக்கியங்களுக்கு ஆக மங்களிலுள்ள 'சைத்ராதி' சப்தங்களை சௌரமானப் பெயர் களாக்கிக் கொள்ளவேண்டுமென்று பொருள் கொண்டார்கள் போலும்.

இவ்வாறுகொண்ட தம்கொள்கையைப் பிழையென்று கருதாமல் தம்முள்த் தாமேமகிழ்ந்து காரணகமத்திலுள்ள 'ஆஸ்வயுஜ' பதம் அங்குகூறப்பட்ட கற்பரீதியாக உள்ள உத்சவத்திற்கே விதாயமாகு மென்று கூறிய திருநேல்வேலி சைவசித்தாந்த சங்கத்தாரை இகழ்தற்குரியராகக் கருதுவது எத்துடன்ஒக்கும் என்பதை விவேகிகளே அறிந்து கொள்ளட்டும்.

எல்லாமதங்களையும் அங்கமாகத் தன்னுட்கொண்டு இராசாங்கத்தமர்ந்து அங்கியாகப் பிரகாசிப்பது வேதத்திற்கிணங்கிய சைவசமயமே யாதலால் ஆகமங்களிலுள்ள ஞானபாதங்களில் இதரமதங்களை அனுவாதம் செய்து அந்தந்த அதிகாரிகளுக்குத் தக்கவாறு அந்தந்த மதம் உண்டாயிற்று என்று கொள்வதுபோல் கிரியாபாதங்களிலும் கொள்ளவேண்டுமென்று ஏன் அவர்கள் கொள்ளக்கூடாது?

அன்றியும், சூக்ஷ்மாகமம், பூர்வகாரணம், உத்தரகாரணம், காமிகம் இவற்றில் ஸௌரமானமே சிரேஷ்டம் சாந்திரமானம் மத்திபம் அதில் உத்ஸவங்களைச் செய்யக்கூடாது என்று ஓயாமல் கூறியிருக்கவும் புஸ்தகத்தின் 11-வது பக்கத்தில் மகோத்ஸவங்களுக்கும் நவராத்திரி உத்ஸவத்திற்கும் வேற்றுமையைக் காட்டி மகோத்ஸவங்களை அதற்குமுன் மாதங்களில் செய்வதுபோல் நவராத்திரியைச் செய்யக்கூடாது. ஆரம்பதினம் புரட்டாசியாகவே இருத்தல்வேண்டும் நவராத்திரிக்கு ஒன்பதுநாளும் முக்கியம் என்று கூறியிருக்கிறார்கள் இவர்களிடம் ஓர் ஆக்ஷேபணைசெய்கிறேன்.

புத்தகத்தின் 10-வது பக்கத்தில் ஒன்பது நாட்களுமே உத்தமம் என்று பத்திரிகையில் கூறியவர்கள் முடிவான மகாநவமியை மாத்திரம் ஏன் ஐப்பசியில் நடத்தவேண்டும்.

"மாஸி பாத்ரபதே பக்ஷே சுக்லே ப்ரதிபதாதிகம்
நவம்யந்தம் விசேஷேண பூஜயித்வா மஹேச்வரீம்."

என்ற சுலோகத்திற்குஆரம்ப மாத்திரம் புரட்டாசியாக இருக்கவேண்டும் முடிவுதினம் எம்மாதமாயினும் சரியென்று பொருள் கொள்ளவேண்டும்? அதற்குச் சுலோகம் இடங்கொடுக்கின்றதா?

மகாஜனங்களே! பெரியோர்களே! சபையோருக்குப் பணிந்து இவ்விஷயத்தைக் கொஞ்சம் தெரியப்படுத்துகிறேன். அழகப்பமுதலியார் அவர்கள் அச்சிட்ட அகோரசிவாசாரியார் இயற்றிய மகாநவமிபூஜாவிதியில் உள்ள சுலோகத்திற்குப் புரட்டாசியில் பிரதமை முதல் நவமிமுடிவாக உத்ஸவத்தை நடத்த வேண்டுமென்று பொருள். இவ்வளவேயன்றி ஆரம்ப மாத்திரம் புரட்டாசியாக இருக்கவேண்டும். மற்ற தினங்கள் எம்மாதத்தினும் இருக்கலாம் என்று பொருள் கொள்ளுவதற்குச் சுலோகம் இடங்கொடுக்கவில்லை. நவராத்திரியில் ஒன்பது நாட்களும் பிரதானமாயினும் அவற்றுள்ளும் எதை முக்கியமாகக்கொண்டு உத்ஸவத்தை நடத்தவேண்டும் என்னும் ஆசங்கை நிகழுகின்றது. திவ்யாகமங்களைக் கொண்டு இதற்கு நிர்ணயம் செய்துகொள்ள வேண்டும். அதாவது, மகோத்ஸவத்திற்கு நக்ஷத்திரம் பிரதானம் நவராத்திரிக்குத் திதி பிரதானம். நவராத்திரி உத்ஸவம் நக்ஷத்திரப்பிரதானமான உத்சவமாக இல்லாவிடினும் திதிப்பிரதானமான உத்ஸவந்தான். திதிப்பிரதானமான கிருஷ்ண ஜயந்தி உத்ஸவம் சிம்ம மாதத்தில் முதல் தேதியில் நேரிடினும் உத்ஸவமாக நடத்துபவர் அதற்கு முந்தின ஆடிமாதத்திலேயே ஆரம்பித்து எவ்விதம் நடத்துகின்றனரோ அதுபோலவும் நக்ஷத்திரம் ஒன்றினுல்மாத்திரம் வேறுபட்ட மஹோத்ஸவங்களில் தீர்த்த நக்ஷத்திரம் முதல்தேதி 2-ம்தேதி நேரிடின் முன் மாதங்களில் தொடங்கி எவ்வாறு நடத்துகின்ருேமோ அதுபோலவும் தீர்த்த தினத்தை முக்கியமாகக்கொண்டு நவராத்திரி உத்சவத்தை ஏன் ஆவணியில் ஆரம்பிக்கக்கூடாது. புரட்டாசியிலேயே ஆரம்பிக்க சுலோகம் இடங்கொடுக்கிறது எனின் அதே சுலோகம் முடிவும் புரட்டாசியிலே இருக்கவேண்டுமென்று இடங்கொடுப்பதால், முன்கூறியபடி வரையரைசெய்து பொருள் கொள்ளாமல் "மாஸி பாத்ரபதே" என்னும் சுலோகத்திற்கு வேறு எவ்விதம்பொருள் கொள்வது?

அன்றியும் காரணகமத்தில் உள்ள 'ஆச்வயுஜ்' பதத்தை வெகு சம்பிரதாயமாகச் சௌரமானமாகக் கொள்ளவேண்டுமென்று கூறுபவரே மகாநவமிபூஜாவிதியில் உள்ள பிரதமை முதற்கொண்டு என்ற வாக்கியத்திற்கு புரட்டாசியில் பிரதமை

இருக்கவேண்டுமென்று கூறுவதால் அக்கூற்று, மனதில் சாந்திர மான மாதத்திலே உத்ஸவங்களைச் செய்ய எண்ணி வெளியில் சௌரமானப்படி நடத்துபவர் போலுள்ளவரின் கூற்றேயாகும். அவ்விதமில்லாவிடில் அதே சுலோகத்தில் நவராத்திரியின் முடிவும் புரட்டாசியாகவே இருக்கவேண்டுமெனக் கண்டிருப்பதால் ஏன் முடிவுதினத்தை மாத்திரம் ஒதுக்கிவிடவேண்டும்?

நவராத்திரியிலே துர்க்கை, இலக்குமி, சரசுவதி ஆகிய மூவருள் ஒவ்வொருவரையும் தனித்தனி மும்மூன்று தினங்களாக உபாசிக்கவேண்டும் என்னும் கருத்தாகையால் எது முதற்கொண்டு என்னும் ஆசங்கை நிகழ பிரதமை முதற்கொண்டு என்று கூறினரே அல்லது ஆரம்பதினம் பாத்ரபதப் பிரதமையாய்த்தான் இருக்கவேண்டும் என்ற கட்டாயம் கிடையாது.

வேதங்களின் கருத்தைத் தழுவுவதாக ஸ்மிருதிகளை எவ்வாறு கொள்ளுகின்றனரோ அவ்வாறே ஆகமங்களின் கருத்தைத் தழுவுவதாக அகோரசிவாசாரியார் முதலியவர்களால் செய்யப்பட்ட பத்ததிகளையும் கொள்ளவேண்டும். ஸ்மிருதி புராணங்களில் சாந்திரமானத்தை உயர்வாகக் கூறியிருப்பினும் ஆகமங்களில் உயர்வாகக் கொள்ளாமையால் ஆலயங்களுக்கு நவராத்திரியை சௌரமானத்தைக்கொண்டே செய்யவேண்டுமென்பதற்கு என்ன ஆக்ஷேபனை? விநாயகசதுர்த்தி, நவராத்திரி இவற்றை சாந்திரமானப்படி செய்ய ஆகமம் இடங்கொடுத்தால் இச்சபையில் அப்பிரமாணத்தைத் தெரிவிக்கக் கோருகிறேன். அவ்விதப் பிரமாணத்தைக் காட்டாதவரை மகோத்ஸவவிதிப்படலங்களிற் கூறப்பட்ட சௌரமாசமே சிரேஷ்டம் என்ற வாக்கியங்களையும் சைவகால விவேகத்திலுள்ள சாந்திரமானம் வியவகாரத்திற்காக ஏற்பட்டது. ஸௌரமாஸத்தை மேற்கொண்டே உத்ஸவங்களை ஆகம முறைப்படி நடத்தவேண்டுமென்னும் வாக்கியங்களையும் மேற்கொண்டு மகாநவமி பூஜாவிதியில் உள்ள “மாஸிபாத்ரபதே” என்னும் சுலோகத்தை அனுசரித்து ஒவ்வொரு புரட்டாசியிலுமே நடத்தவேண்டுமென்பது என்னுடைய பூரணமான கொள்கை.

நிர்ணய புத்தகத்தின் 6-வது பக்கத்தில் நமது முன்னோர்கள் இச்சிரமத்தை எடுக்காமல் விடுத்தது எக்காரணம் பற்றியோ

என்று எழுதப் பட்டிருக்கின்றது. முன்னோர்கள் என்னும் பதத்திற்கு சிஷ்டர்கள் என்னும் கருத்தைக்கொண்டே பிரயோகித்திருக்கின்றனர். வேதத்தில் விதிக்கப்பட்டதைச் செய்தலும் விதிக்கப்படாததைச் செய்யாதிருத்தலுமே தருமமாகையால் அதனையுடையவரே சிஷ்டர்களாவார். வெகுநாட்களுக்கு முன்னுள்ள நம்முடைய முன்னோர்கள் சாந்திரமானப்படி தான் நவராத்திரியை ஹோமகாரியங்களுடன் ஆலயத்தில் நடத்தினர்கள் என்பதற்கு சுமார் 200 வருஷத்திற்கு முந்திய ஆதாரங்களை இவர்கள் காட்ட முடியுமா? அக்காலத்திலன்றோ சிவாசாரியர்கள் மிக வல்லுநர்களாயிருந்தார்கள். சிவாசாரியர்களின் பிரபாவம் குறைந்தது சுமார் 200 வருஷங்களுக்குமேல் ஆய்விட்டது. அப்பேர்ப்பட்ட சிவாசாரியர்கள் போல் உள்ளவர்கள் சமீபித்த 200 வருஷங்களிலும் இருந்திருப்பின் இப்பேர்ப்பட்ட ஆகமமாறுபாடான கலப்புத்தோஷம் நேரிட்டிருக்காது. ஆகமங்களிலும், வேதங்களிலும் விதிக்கப்பட்டதையும் விதிக்கப்படாததையும் செய்பவர்கள் சிஷ்டர்கள் ஆகார்கள். சிஷ்டர்களாகக்கொண்டால் தற்காலத்தில் நம்மால் சிஷ்டர்களாகக் கருதப்படுபவர்களிடம் தமக்கே தெரியுமாறு பெரிய குறைகள் இருப்பதால் அவர்களும் சிஷ்டர்களாக ஆய்விடுவார்கள். இவ்விஷயம் **சிவநேசன் 1104-ம் ஆண்டு ஆவணி 26-உ வெளிவந்த 2–4வது இதழில் விநாயக சதுர்த்தியும், நவராத்திரி உத்சவமும்** என்னுந் தலைப்பின்கீழ் **3–ம் பக்கம் 4–வது பாராவில்** வெளியிட்டிருக்கிறபடியால் அதனை அறிஞர்கள் அறிவாராயின் மாச்சரியமின்றி உண்மையைக் கிரகித்துக்கொள்வார்கள். அறிஞர்களே **காரணாகமத்தில் உள்ள** 'ஆச்வயுஜ்' பதத்தைச் சாந்திரமானமாகக் கொண்டு கல்பரீதியாக நடத்தப்படும் உத்ஸவத்திற்கே ஆச்வயுஜ் பதம் விதாயமாகும் என்று சிவநேசனில் கூறிய யான் ஹோமகார்யங்களுடன் நடத்தப்படும் நவராத்திரிஉத்சவத்தை எந்த மாதத்தில் நடத்தும்படி காரணாகமம் கூறியிருக்கிறது என்று பொது ஜனங்களால் கேட்கத்தகுந்தவனாய் இருக்கிறேன். இதனை ஷடிநிர்ணய புத்தகத்தில் ஆக்ஷேபிக்காவிடினும் அறிஞர்களுக்கு அறிய அவா இருக்குமாதலால் இதைப்பற்றிக் கொஞ்சம்கூறி நிறுத்துகிறேன்.

சிவாசாரியர்கள் தங்களுடைய சௌகரியத்தைக் கருதிக் **காரணாகமம்** முதலிய ஆகமங்களில் இருக்கும் நவராத்திரிவிஷய

மாக உள்ள பிரமாணங்களையும் மற்றப்படி ஒவ்வொரு ஆகமங்களிலும் உள்ள உத்ஸவ விஷயங்களையு மாத்திரம் தாம் வேருக ஏட்டில் குறித்துக்கொண்டு அதற்கு **மகோத்ஸவ விதி** என்று பெயரையும் இட்டு தத்தம் கிரகங்களில் பூட்டிவைத்துக்கொண்டு இருக்கின்றனர். அவற்றுள் பல கரையானுக்கு இரையாய்த் தற்சமயம் கோட்டையூர் ஸ்ரீலஸ்ரீ அப்பாசாமிககுருக்களவர்கள் கிரகதில் மாத்திரம் தேடின அளவில் **மஹோத்ஸவ விதி** என்னும் ஓர் ஏடு இருக்கின்றது. அவ்வேட்டிலிருந்து குறித்துக் கோத்தமங்கலம் ஸ்ரீலஸ்ரீ ஏகாம்பரேசுவர சிவாசாரியார் அவர்களால் கழகத்தார் வாயிலாக ஓர் துண்டுப் பிரசுரம் வெளியிடப் பட்டிருக்கின்றது. எவரோ ஒருவர் ஷெ சிவாசாரியரவர்களை நேற்றிரவு நிகழ்ந்த சபையில் சாஸ்திரவழியாகக் குறைகூறுது லௌகிகவழியாகக் குறைகூறியதை மறுக்காமல், விநாயக சதுர்த்தி நவராத்திரி ஸ்கந்தசஷ்டி நிர்ணயம்' என்னும் புஸ்தகத்தை வெளியிட்டவர்கள் 'அவாந்தர சைவர்கள் தமக்கு மேலுள்ள சைவர்களைத் தூஷிப்பது அழகில்லை என்பதைப் பற்றி வெளியிட்டது பாரபக்ஷமுள்ள செயலென்பதை அறிஞர்கள் அறிந்திருப்பார்கள். நிற்க.

மேலே குறிக்கப்பட்ட கோட்டையூர் சிவாசாரியார் அவர்கள் வைத்திருக்கும் ஏட்டுப்பிரதியில் புரட்டாசி மாசத்தில் தசமியில் சமீ பூசை செய்யவேண்டு மென்று காரணுகமத்தில் இருப்பதாக அறியப்படுகிறது. ஆகவே காரணுகமத்தில் புரட்டாசியில்அனுட்டிக்கப் பிரமாணமில்லை என்பது பயனற்ற சொல்லாகும்.

நிர்ணய புத்தகத்தின் 7-வது பக்கத்தில் சாஸ்திரம் இருவிதமாகில் இரண்டையும் ஒற்றுமைப்படுத்தியே கொள்ளல்வேண்டும். எவ்விதமெனில் சௌரமானத்தையும் சாந்திரமானத்தையும் சேர்த்துப் பொருள்கொண்டோமானல் சௌரமான ஆவணியும் சாந்திரமான புரட்டாசியுஞ் சேர்ந்த பூர்வ பக்ஷத்துச் சதுர்த்தியானது விநாயக சதுர்த்தியான, சதுர்த்திவிரத சமாப்தி தினமாகும். அப்பொழுது இருவசனங்களும் அங்கிகாரஞ் செய்யத் தகுந்ததே." என்று குறிக்கப்பட்டிருக்கின்றது.

இது எத்துணை பொருத்தமாகுமென்பதைப் பற்றி ஆராய்வாம். புராணங்கள் சாந்திரமானத்தை மேற்கொண்டு பிரவிருந்

இத்த நூல்கள். ஆகமங்களோ ஸௌரமானத்தை மேற்கொண்டு பிரவிருத்தித்த நூல்கள். ஒன்றுக்கொன்று முற்றிலும் மாறு பட்ட இந்நூல்களைச் சமந்வயப்படுத்துதற்காகச் சௌரமானமான ஆவணியின் பின்பாகத்தையும் சாந்திரமானமான புரட்டாசியின் முன்பாகத்தையும் சேர்த்துப் பொருள் கொள்ளுவது அர்த்த ஜாதிய நியாயத்தை அறியாமையாகும்.

இனி 12-வது பக்கத்தில் 'கந்யாகதே ஸவிதரி' என்பது முதலாகக் கூறப்பட்ட காமிகம் துர்க்கா பூஜாவிதிப்படலத்தி லுள்ள சுலோகங்களைப்பற்றி கொண்ட அவர்களின் அபிப்பிரா யத்தைஆராய்வாம். பால்யவயதில் திண்ணைப்பள்ளிக்கூடங்களில் வாசிக்கும்பொழுது விஷ்ணு சகஸ்ரநாமத்தை ஏட்டுச்சுவடியில் எழுதிப்போட்டு வாசிக்கச் செய்வது வழக்கம். அந்த விஷ்ணு சகஸ்ரநாமத்தின் பயனைச் சொல்லக்கூடிய வாக்கியத்தைப் பல சுருதியாகக் கவனித்தால்

வேதாந்தகோ ப்ராஹ்மண ஸ்யாத்
க்ஷத்ரியோ விஜயீ பவேத்
வைச்யோ தநஸம்ருத் தஸ்யாத்
சூத்ரஸ் சுகமவாப் நுயாத்

என்று ஓர் சுலோகம் இருக்கிறது. இதன் பொருள் விஷ்ணு சகஸ்ரநாமத்தை எவன் பாராயணஞ் செய்கின்றானோ அவன் பிராமணராயின் பிரமத்தை அறிந்தவனாவான் க்ஷத்திரியனாயின் சத்துருக்களிடமிருந்தும் ஜயத்தைப் பெறுவான். வைசியனாயின் செல்வவானாக ஆவான். சூத்திரனாயின் சுகத்தைப் பெறுவான் என்பதாம். இதைக்கொண்டு பிராமணர்களைத் தவிர மற்றவர் களுக்குப் பிரமஞானம் வேண்டாமென்பது கருத்து இல்லை. குறித்த நான்கு வர்ணத்தாருக்கும் நான்கு விதப் பலன்களும் உடன்பாடாயினும் முக்யம் முக்யமில்லாமை என்பதை ஆராயுங் கால் பிராமணர்கள் முக்கியமாக பிரமக்ஞானத்தையே வேண்ட வேண்டும்; க்ஷத்திரியர் முக்கியமாக சத்துருக்களிடமிருந்து ஜயத்தையே விரும்பவேண்டும்; வைசியர் எவ்வாற்றானும் தனத் தையே சேகரிக்கவேண்டும்; சூத்திரர் சுகத்தையே விரும்ப வேண்டும்; என்னுங் கருத்துடையதாய் இந்த சுலோகம் இருக் கின்றது. ஆகவே சத்ருவிஜயம் என்பது அரசராலேயே முக் கியமாக வேண்டப்படுவதாகும். ஆனதால் துக்கமின்றி சத்துருக்

களை ஜயித்தல் அரசருக்கே உரிமையானபலம் என்பதில்கொஞ்ச மேனும் ஆக்ஷேபனை இல்லாமல் இருக்க அரசர்க்குரியது என்று துர்காபூஜா விதிப்படத்தில் உள்ள துர்க்காபூஜையை ஓதுக்கினல் கிருதகம்பளபூஜையையும் (நெய்ப்பாவாடை) சந்தனபூசையையும் (சந்தணபாவாடை) முறையே ரோகிகளுக்கும் சந்தானம் வேண்டு பவர்க்குமே உரியனவாகும்படி விலக்கவேண்டும் என்று கூறிய அவர் கூற்று உபமானோபமேயங்களுக்கு மிகவும் மாறுபட்டபடி யால் அவர் கூற்றை அறிவாளிகள் யாரும் ஒப்பமாட்டார்களே ஒழிய அரசர்க்கு எனக்கூறியவரின் கூற்றை எவரும் ஒப்புக் கொள்வார்கள் என்பதில் என்ன தடை? உபமானோபமேயங்க ளின் பேதத்தைப்பற்றி ஆராய்வாம். உபமேயமான துர்க்காபூஜா விதிப் படலத்தில் "ராசோகோ ஜயதி த்விஷ: என்றுமாத்திரம் கூறியிருந்தால் அவர் கூற்றுப் பொருந்தும்.

இவ்வாறின்றி அரசர்க்கே உரிமை என்பதற்குப் பல கார ணங்கள் இருப்பதால் அவற்றை இங்கு கூறுகின்றோம்.

1. உத்தரகாமிகம் 235-வது பக்கம் துர்க்காபூஜாவிதிப் படலத்தில் 5, 6, 7—வது சுலோகங்களால் மகிஷம் முதலிய வற்றை பலிகொடுக்கவேண்டும் பலிஜீவன்கள் சுவர்க்கத்தில் சுகத்தை அடையும் அப்ஸரஸ்திரிகளின் சௌக்கியத்தைப் பெறும் ஒவ்வொரு ஸ்தானங்களிலும் பட்டணத்திலும் வீரர்களை உபசரிக்கவேண்டும் என்று கூறப்பட்டிருக்கின்றது.

2. 9-வது சுலோகத்தில் அரசரின் அடையாளத்தை உடைய எல்லா ஆயுதங்களையும் வேதிகையில் பூசிக்கவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது.

3. 13-வது சுலோகத்தில் பிரதி சரபந்தம்கொண்ட ஐந்து யானைகளையும் குதிரைகளையும் பலவித கோஷங்களுடன் ஒவ் வொருநாளும் பட்டணத்தைச் சுற்றிவரச்செய்யவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது.

4. 14-வது சுலோகத்தில் ஒவ்வொருநாளும் அரசன் தன் பிதிரு தேவதைகளையும், ராஜசின்னங்களையும் உபசரிக்கவேண் டும் என்று கூறப்பட்டிருக்கிறது.

5. 16—வது சுலோகத்தில் ஹோமஞ்செய்தவை போக எஞ்சியவற்றை வீரயானைக்குக் கொடுக்கவேண்டும் அந்த மத

யானையை அரசன் பிடித்தால் அவனை விஜயனுகக்கொள்ளவேண்டு மென்று கூறப்பட்டிருக்கிறது.

6. இதற்குப்பின்னுள்ள சுலோகங்களால் குடை, குதிரை, துவஜம், யானை, பதாகை, கட்கம், கவசம், துந்துபி என்னும் வாத்தியம், வில்லு, சங்கம், சாமரம், க்ஷுரிகை, சொர்ணதண்டம், சிம்மாஸனம் இவற்றை அந்தந்த பீஜாக்ஷரங்களுடன் பூசை செய்யவேண்டும் என்றும் இதுபோன்ற பலவிஷயங்களும் துர்க்கா பூஜாவிதிப்படலத்தில் கூறப்பட்டிருக்கின்றன. இதனை முற்றிலு முணராமல் நிர்ணய புஸ்தகத்தை வெளியிட்டவர்களைப் பற்றி யான் என்னென்று சொல்லுவது? நிற்க.

நிர்ணய புத்தகத்தில் 12-வது பக்கத்தில் 'கந்யாகதே ஆச்வயுக்சுக்ல அஷ்டம்யாஞ்ச' என்னும் தொடர்ச்சியுள்ள மூன்று சுலோகங்களையும் குறிப்பிட்டு அதன்பின் மேலே குறிக்கப்பட்ட மூன்று சுலோகங்களில் முதல் இரண்டைக் குறித்து அதில் ஒன்று தங்களுக்குச் சாதகமாகவும் ஒன்று அரசர்க்குரியது என்றும் ஓதுக்குகிருர்கள். ஒரே இடத்தில் இரண்டு பிரமாணம் இருக்குங்கால் ஒன்றைத்தள்ளுவதும் மற்ருென்றைக் கொள்ளுவதும் எந்த ஆசாரியரின் அபிப்பிராயமோ? தள்ளுவதானுல் அப்படலமே அரசர்க்குரியதென்று தள்ளவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது.

இதைப்பற்றிக்கூறுவது அவசியமென்று எனக்குத்தோன்றவில்லை. ஏனென்ருல் "கந்யாகதே ஸவிதரி" என்னும் சுலோகத்திற்குப் பின்னுள்ள ஆஸ்வயுக்சுக்ல என்னும் சுலோகத்தில் வா என்னும் ஒரு சப்தம் இருப்பதைக் கவனித்தால் "கந்யாகதே" என்ற சுலோகம் ஒரு மாஸத்தைக் குறித்ததென்றும் ஆச்வயுக் சுக்கில பக்ஷே வா என்ற சுலோகம் வேறொரு மாஸத்தையும் குறித்ததென்றும் ஸ்பஷ்டமாக விளங்கும். திவ்யாகமங்கள் ஆலயவழிபாடுகளைக் கூறுவதுடன் ஆன்மாக்களுக்கு இன்றியமையாத ஆன்மார்த்தக் கிரியைகளையும் விளக்குவதென்பதைக் காமிகம் முதலிய ஆகமங்களில் கூறப்பட்ட சதாபிஷேகம் முதலிய கிரியைகளால் விளங்கும். அந்த முறையை அனுசரித்து துர்க்கா பூஜாவிதிப்படலத்தில் அரசர்க்குரிய நவராத்திரி பூசை கூறப்பட்டிருக்கிறது. துர்க்காபூஜாவிதிப் படலத்தில் "ஆச்வயுக்

சுக்லபக்ஷேவா'' என்ற சுலோகத்தால் குறிக்கப்படும் சாந்திர மான விதியே போதுமானதாயினும் இரண்டுவிதமாக நவராத்திரி உத்ஸவம் உண்டென்பதற்காகவே முதல் சுலோகத்தால் சௌர மானப்படி செய்யப்படும் நவராத்திரியைக் கூறிவிட்டு ஆச்வயுக் சுக்லபக்ஷேவா என்ற இரண்டாவது சுலோகத்தால் சாந்திர மானப்படியும் ஒருவித நவராத்திரி உத்ஸவம் உண்டு என்பது வற்புறுத்தப்படுகின்றது. ''ஆச்வயுக் சுக்ல பக்ஷேவா'' என்னும் சுலோகத்தாலேயே ஐப்பசிமாசத்து நவமி மூவுலகத்தாராலும் அடையமுடியாதது என்று அவ்வளவு சிறப்பாகக்கூறியிருக்கிறார் என்று நிர்ணய புத்தகத்தின் 13-வது பக்கத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது. அரசர்க்காகக் கூறப்பட்ட சாந்திரமானத்தை உயர்வாகக்கூறவேண்டியே அங்குக்கூறப்பட்டது. இவ்வளவே ஒழிய வேறில்லை. இன்னும் இவ்விஷயத்தைப்பற்றி கூறுவது ஆவசியகமெனத்தோன்றாமையால் இத்துடன் நிறுத்திக்கொண்டேன்.

இங்ஙனம்,

சுப்பிரமணிய சாஸ்திரி,

வியாகரணசிரோமணி,

சிவாகம சங்கத்துவித்வான், தேவகோட்டை.

விசய தசமி நிர்ணயம்.

நவராத்திரி ஆவணிமீ 31-உ பாத்திரபத சுக்கிலப் பிரதமை முதல் ஆரம்பம் செய்து சைவப்பஞ்சாங்கத்திற் குறிப்பிட்டபடி புரட்டாசிமீ 9-ஆந்தேதி திங்கட்கிழமை விசய தசமி செய்வதே சரியென்று சிவாகமங்கள் கூறுகின்றன.

(1) கன்யாமாசே சிதேபட்சே தசாஹேது திதித்வயே,
சமீபூஜாச கர்த்தவ்யா தசமியாம் லசவகாரயேத்.
அன்யத்ரதிதி பூஜாச ராஜாதுர்ஜய மாப்நுயாத்,
கிருமகர்த்திரு விநாசாய தனதான்ய விநாசனம்.

புரட்டாசி மாதத்தில் சுக்கில பட்சத்தில் பத்தாவது தினத்தில் எந்த திதியிருக்கிறதோ அந்த திதியில் சமீபூசையைச் செய்யவேண்டும். தசமியில்தான் செய்யவேண்டும். வேறு திதிகளைக்கொண்டு பூசை செய்வதால் அரசர்கள் அபஜெயமடைவார்

கள், கிராம அதிகாரி நாசத்தை அடைவான், பொருளுந் தானியங்களும் நாசத்தை யடைந்து விடுகின்றன என்று மகுடாகமத்திலும், அவ்வண்ணமே,

(2) கன்யாமாசே சிதேபட்சே தசம்யாம்ச சமீம்யஜேத்
பூர்வாஹ்ணேவா பராஹ்ணேவா தசாஹே திதிசம்பவே.
தத்காலேது விசேஷேண விதிவத் பூஜயேத்குரு:-

புரட்டாசி மாதத்தில் சுக்கில பட்சத்து தசமியில் சமீபூசை செய்யவேண்டும், பத்தாவது தினமாகிய தசமி திதியானது பத்தாவது தினத்திற்கு முதல் நாளாவது மறுநாளாவது வருமேயானுல் அந்தக் காலத்தில் சாஸ்திரப்பிரகாரம் விசேஷத்தோடு கூடிய தசமி திதியில் பூசிக்க வேண்டியது என்று அஜிதாகமத்திலும்,

(3) தசம்யாம் பூஜயேத் தேவம் உதயே உத்தமம் பவேத்
மத்யாந்நே மத்யமம் ஞேயம் சாயங்காலே அதமம் பவேத்.
விருத்தௌ வாத க்ஷயேவாபி தசாஹேது சமீம்யஜேத்
உதயாத்யா மஹீநேது பூர்வேத்யுப் பூஜயேத்குரு:.

தேவனை தசமியில் பூசிக்கவேண்டும், உதயத்தில் பூசிப்பது உத்தமமாக ஆகும், மத்தியானத்தில் மத்திமம் என்று தெரிந்துகொள்ளவேண்டும், சாயங்காலத்தில் அதமம், தசமி திதியானது விருத்தியாயிருந்தாலும் குறைவாக இருந்தாலும் பத்தாவது தினத்தில் சூரிய உதய முதல் ஒரு சாமத்திற்கு தசமி திதியானது குறைவாக இருக்குமானுல் ஆசாரியன் முதல் நாள் பூசிக்க வேண்டு மென்று நிச்வாஸ காரிகை என்ற கிரந்தத்திலும்,

(4) மாஸே பாத்ரபதே சுக்லே தசம் யாமூதனம் குஹ
சாதிதௌ மிருக யாத்ராச சைவாகமேஷு பாஷிதம்.

ஏ குகனே! புரட்டாசி மாதத்தில் சுக்கில பட்சத்து தசமியில் பூசை செய்யவேண்டும், அந்த தசமியில் சைவாகமங்களில் சொல்லப்பட்ட பிரகாரம் மிருக யாத்திரையையும் செய்யவேண் வேண்டும் என்று காரணகமத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

விபவஸு புரட்டாசிமீ
கொத்தமங்கலம்

ஏகாம்பரேச்வர சிவாசாரியார்.

கந்தர் ஷஷ்டி உற்சவம்.

கந்தர் ஷஷ்டி ஆரம்பம் புரட்டாசிமீ 29உ ஞாயிற்றுக்கிழமையே.
கந்தர் ஷஷ்டி ஐப்பசிமீ 3உ வெள்ளிக்கிழமையே.

கந்தர்ஷஷ்டியைப்பற்றி * கௌசிகப்பிரஸ்நகுமாரதந்திரம் என்ற ஆகம நூல் தெளிவாக நிர்ணயிக்கிறது. அவ் வசனம் வருமாறு:—

''அதாத சம்பிரவச்யாமி ஸ்கந்தஷஷ்டி விதிம்ஸ்ருணு
நவாஹஞ்சாபி சப்தாஹம் ஷஷ்டாஹஞ்ச திரியாஹகம்
அதவா தத்திநேவாபி சோத்ஸவஞ்ச சமாசரேத
துலாயாம் ரவிசம்பிராப்தௌ சுக்லபக்ஷே விசேஷத:
ஷஷ்டியந்தம் உத்சவம்கிருத்வா சாந்யமாஸே நகாரயேது
காரயேது யதிமோஹேந கர்த்தாபோக்தா விநஸ்யதி
உத்ஸ வாரம்பகாலேது த்விமாஸம் ஸம்பவேத்யதி
நதோஷ இதிவிக்யாத: ஸ்கந்தஷஷ்டி துலாரவௌ
துவிவாரே கண்டிதே தித்யாம்ராத்ரௌவியாபி விசேஷக:
திவாவியாப்தம் நகர்த்தவ்யம் கிருதஞ்சேது கர்மநாசனம்
சௌரமாநேந கர்த்தவ்யம் சாந்திரமாநே நகாரயேது.

இதன் பொருள்:— ''பிற்பாடு அதனால் கந்தஷஷ்டி விதியைச் சொல்கிறேன் கேட்பாயாக. ஒன்பது நாளாவது, ஏழுநாள், ஆறுநாள், மூன்று நாளும் அல்லது அதே நாளாவது உற்சவம் செய்யத்தக்கது. (ஸௌரமாஸமான) துலாத்தில் சூரியன் வந்த போது (ஐப்பசிமீ) சுக்ல பக்ஷத்தில் விசேஷமாக ஷஷ்டி முடிய உற்சவம் செய்க. மற்ற மாதத்தில் செய்யற்க. மயக்கத்தினுல் செய்வானேயானுல் செய்பவனும் செய்விப்பவனும் நாசமடைகிறுர்கள். உற்சவ ஆரம்பத்திலே இரண்டு மாதம் சம்பவிக்குமானுல் குற்றமில்லையென்று கூறப்படுகிறது. கந்தஷஷ்டி துலா மாதத்தில் (ஐப்பசி என்னும் ஸௌரமாஸம்) தான் இரண்டு நாளில் திதி வருமானுல் இரவில் வியாப்பித்ததே விசேஷமானது பகலில் வியாபித்ததில் செய்யக்கூடாது. செய்தால் கர்மம் கெட்டுப்போம். சௌரமானத்தில் செய்யத்தக்கது. சாந்திரமானத்தில் செய்யக்கூடாது.''

* யாழ்ப்பாணம் வரணி ஆதிசைவ ஆதீனத்திலுள்ள குமாரதந்திர எட்டுப்பிரதியில் ஸ்கந்தோத்சவ விதிப்படலத்திலுள்ளது.

மேலேகண்ட பிரமாணத்தினுல் கந்தஷஷ்டி விழாவில் ஷ்ஷ்டி துலா மாதமாகிய ஐப்பசி மாதத்திலிருக்கவேண்டு மென்பதும். ஆரம்பம் முன் மாதத்திலிருந்தாலும் குற்றமில்லை யென்பதும் தெளிவாகிறது. சுமார்த்தர்கள் கூறுகிறபடி கார்த்திகை மாதத்திலில்லை. ஆகையால் நமது சைவப் பஞ்சாங்கத்திற் கண்டபடி கந்தர்ஷஷ்டி விரதத்தை புரட்டாசி மாதம் 29உ ஞாயிற்றுக்கிழமையில் ஆரம்பித்து ஐப்பசி மாதம் 3உ வெள்ளிக்கிழமை கந்தர்ஷஷ்டி முடிய அநுட்டித்து முருகப்பெருமான் திருவருளைப் பெற்று நல்வாழ்வடைய எல்லோரையும் வேண்டுகிறோம்.

இ. மு. சுப்பிரமணியபிள்ளை, சைவப்பஞ்சாங்க கணிதர்.

சைவாபிமானச் செல்வர்களே! சைவாகமானுஷ்டானத்தில் ஆவலுடைய ஆன்றோர்களே! சைவாகமமுறைப்படி யான் சொல்லும் வசனங்களைச் செவியாற் கேளுங்கள்.

சிவாலயங்களுக்கும், சைவர்கள் முதலான ஸமஸ்த ஜாதிக்காரர்களும் ஸ்கந்த ஷஷ்டி விருதத்தை ஸௌரமாஸத்தினுலேயே செய்யவேண்டும். அதற்குப் பிரமாணம்:—

(1) மாஸச்சத், விவிதப்ரோக்த: ஸௌரம்ஸ்யாத் சாந்திரமானகம்
ஸௌரமாநேந-கர்த்தவ்யம் விருதம் சோத்ஸவ முத்தமம்
அதமம் சாந்திரமானேன சைவாதீநாம்து நிஷ்பலம்
ஸௌரமாநேந-கர்த்த்வ்யம் சைவாதீநாம் விசேஷத:
த்விஜாதீனும்ச ஸ்மார்த்தானும் சாந்திரமானே விருதாந்யபி
உபாகர்மம்ச, பித்ரியம்ச, சிவராத்திரி விருதம் விநா.

இதன் பொருள்:— மாஸமானது இருவிதமாகச் சொல்லப்படுகிறது. ஸௌர மென்றும், சாந்திர மென்றும் ஆகிறது. விருதத்தையும்,உத்ஸவத்தையும் சௌரமானத்தினுல் செய்வது உத்தமம். சைவர்கள் முதலானவர்களுக்கு சாந்திரமானத்தினுல் செய்வது அதமம் நிஷ்பலம். சைவர்கள் முதலானவர்களுக்கு ஸௌரமானத்தினுல் செய்வது ஸ்லாக்கியம். ஸ்மிருதியிற் சொல்லிய பிரகாரம் கர்மாக்களைச் செய்கிற பிராமணர்களுக்கு சாந்திரமானத்தினுல் விருதங்கள் செய்யத்தக்கது. உபாகர்மாவும், பிதுருகாரியமும் சிவராத்திரி விருதமும் நீங்கலாக என்று அஜிதாகமம் சிவராத்ர பூஜாவிதிப் படலத்திலும் கூறப்படுகின்றன.

விபவஹு புரட்டாசிமீ 16உ கொத்தமங்கலம்	ஏகாம்பரேச்வர சிவாசாரியர்.

மீராணியா பிரஸ், திருநெல்வேலி 12-28.